Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 மாசி-21 05-03-2005 சனிக்கிழமை ஓசை -15

- 5 MAR 2005




கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123, பஜார் வீதி, வவுனியா.
T.P.-024-2222464

இல:194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987

(சி-11456)



வீதி மறியலில் வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள்



வீதியில் ரயர் போட்டு எரித்து வீதித்தடை

# யாழ்.இல் ராணுவ உழவுஇயந்திரம் மோதி

# பாடசாலைச் சிறுமி பரிதாப மரணம்!

## மாணவர், ஆசிரியர் வீதியில் மறியல்; ராணுவம் துப்பாக்கிச் சூடு

## ஆத்திரமுற்ற இளைஞர்கள் ராணுவ காவலரணுக்கு தீவைப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மாணவி ஒருவர் நேற்றுக்காலை 8.00 மணியளவில் இராணுவத்தினரின் உழவு இயந்திரம் மோதியதில் படுகாயமடைந்து யாழ்.போதனா மருத்துவமனையில் மரணமானார். இதனைத் தொடர்ந்து ஆத்திரம் கொண்ட மாணவர்களும், இளைஞர்களும் ஆர்ப்பாட்டத்திலும், வழிமறியலிலும் ஈடுபட்ட அதே வேளை படைத்தரப்பு ஆயுதங்களுடன் வன்முறையில் இறங்கியதையடுத்து இளைஞர்கள் சில இராணுவக் காவலரண்களையும் தாக்கிச் சேதத்திற்குள்ளாக்கினர்.**

7ஆம் ஆண்டில் கல்வி பயிலும், மானிப்பாய் வீதியைச் சேர்ந்த நாகேந்திரம் துளசிகா (வயது-12) என்ற மாணவியே பலியானவராவார்.

ஈருருளியில் பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த இவரை யாழ். போதனா வைத்திய

(12ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை கட்டடம் மீது பொலிசார் துப்பாக்கிச் சூடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பலாலி வீதியில் உள்ள சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைக் கட்டடம் மற்றும் அக் கட்டடத்தில் இயங்கி வரும் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனின் அலுவலகம் என்பனவற்றின் மீது சிறிலங்காப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியுள்ளனர்.

இக் கட்டடத்திலிருந்தவர்கள் பாதுகாப்புத் தேடிக் கொண்டதால் எவரும் பாதிக்கப்படவில்லை. ஆனால் கட்டடம் துப்பாக்கிச் சன்னங்களால் சல்லடை போடப்பட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## செய்தியாளர் மீது படையினர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் நேற்று இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பான செய்திகளைச் சேகரிக்கும் பணிகளில் ஈடுபட்டிருந்த பத்திரிகை நிருபர் ஒருவர் இராணுவத்தினரால் தாக்கப்பட்டுள்ளார்.

இளவாலையைச் சேர்ந்த எஸ். ஜெயன் (வயது-25) என்ற பத்திரிகையாளரே செய்திகளைச் சேகரிக்கச் சென்ற சமயம் யாழ். பரமேஸ்வராச் சந்திப்பகுதியில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.இல் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் வயோதிபர் பலி; இருவர் காயம்

யாழ்.நகரில் பாடசாலை மாணவி ஒருவர் இராணுவ வாகனம் மோதிப் பலியான சம்பவத்தையடுத்து இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின்போது சிறிலங்காப் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலியானார். இருவர் படுகாயமடைந்தனர். இதே வேளை பொலிசார் நடத்திய தாக்குதலில் 15 இற்கு மேற்பட்ட

(12ஆம் பக்கம் பார்க்க)

## தெ.கி.பல்கலை பதில் உபவேந்தர் இல்லம் மீது துப்பாக்கிச் சூடு

தென்கிழக்குப் பல்கலைக்கழகப் பதில் உபவேந்தர் எம்.நசீரின் இல்லம் மீது நேற்று அதிகாலை இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். அந் நேரம் பதில் உபவேந்தர் அவரது வீட்டிலேயே இருந்துள்ளார். நிந்தவூரிலுள்ள அவரது வீட்டிற்கு வந்த இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட இந்தத் துப்பாக்கிச் சூட்டில் வீட்டின் முன்பக்கம் சேதமடைந்துள்ளது. துப்பாக்கிதாரிகள் அவருக்கு பதவி விலக வேண்டுமென்று எச்சரிக்கை

(12ஆம் பக்கம் பார்க்க)

## சனநாயக வழியில் எதிர்ப்புக் காட்டியோர் மீது படையினர் வன்முறையைப் பிரயோகித்தனர்!

### நேற்றைய சம்பவம் குறித்து இளம்பரிதி

சனநாயக வழியில் தங்களுடைய எதிர்ப்புக்களை வெளிப்படுத்தியபோது சிறிலங்கா பொலிசாரும், இராணுவத்தினரும் அப்பாவி மக்கள் மீது ஆயுத முனையில் கண்ணீர்ப்புகைக் குண்டுகளையும், குண்டாந்தடிப் பிரயோகங்களையும், துப்பாக்கிப் பிரயோகங்களையும் மேற்கொண்டு மக்களைத் தாக்கினர்.

இதனால் மேலும் ஆத்திரமடைந்த மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என யாழ்.மாவட்ட அர

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்


### காணி விற்பனைக்கு

பரந்தன்-பூநகரி வீதியின் தெற்குப் புறமாக (பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தின் அண்மையில்) நீர்ப்பாசன வசதியுடன் கூடிய 4 1/2 ஏக்கர் வயல்க்காணி விற்பனைக்குள்ளது.அரிசிஆலை,வர்த்தக நிலையங்கள் அமைப்பதற்கு வாய்ப்பானது.தொடர்புT.P:- 0112508992,021-2285092 . (5758)


## பாடசாலை திறப்பு

மன்னார் முசலி பிரதேச செயலகத்திலுள்ள புதுவெளியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள முஸ்லிம் பாடசாலை வன்னி புனர்வாழ்வு அமைச்சரால் காலை 9.00 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது. மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.நீக்கிலாஸ்பிள்ளை, மன்னார் கல்வி வலயப் பணிப்பாளர் ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (18)

# சுனாமியால் முல்லையில் பெருமளவான விளை நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன

### – மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் குலதாசன்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமி ஆழிக் கடல் பேரலையின் தாக்கத்தினால் பெருமளவான விளை நிலங்கள் பாதிப்புக்குள்ளாகி உள்ளன என முல்லைத்தீவு மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் கோ.குலதாசன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள உற்பத்தி மேற்கொள்ளப்பட்ட விளை நிலங்களே முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

மானாவாரியாக மேற் கொண்ட நெற்செய்கையில் 1657 ஏக்கர் நெல் வயல் பாதிக்கப்பட்டுள்ளது.94 ஏக்கர் மேட்டுப் பயிர்ச் செய்கையும் 10 ஏக்கர் மரக்கறி செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளன. பல்லாண்டுப் பயிர்கள் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளன. அத்துடன் விவசாயிகள் தமது உற்பத்திக்கு பயன்படுத்திய விவசாய உபகரணங்கள் முழுமையாக அழிக்கப்பட்டதுடன் கிணறுகளிலும் உப்புத் தண்ணீர் உட்புகுந்துள்ளது. நிலங்கள் உவர்தன்மையாக மாறியுள்ளதுடன் கிணறுகளிலும் கடல் நீர் உட்புகுந்துள்ளதால் நிலத்தடி நீரும் உவராக மாறியுள்ளது. இதனால் இப் பிரதேசத்திலுள்ள விவசாயிகளுக்கு பெருமளவு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக விபரங்களை சேகரித்து திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (46)

## திருக்கேதீஸ்வரத்திற்குப் பேருந்துப் பணி

(அலுவலக செய்தியாளர்)

மகா சிவராத்திரி உற்சவத்தை முன்னிட்டு திருக்கேதீஸ்வரம் செல்ல விரும்பும் அடியார்களின் நன்மை கருதி யாழ்ப்பாணத்திலிருந்து நேரடியாக பேருந்து சேவையை வட பிராந்திய போக்குவரத்துச் சபையினர் மேற்கொள்ளவுள்ளனர்.

பருத்தித்துறை பேருந்து நிலையத்தில் இருந்து இரண்டு பேருந்துகளும், காரைநகரிலிருந்து ஒரு பேருந்தும், யாழ் பேருந்து நிலையத்தில் இருந்து ஏழு பேருந்துகளும் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

மேற்படி பேருந்துகள் எதிர்வரும் ஏழாம் திகதி புறப்படவுள்ளதால் பயணம் செய்ய விரும்புபவர்கள் இன்று யாழ். பேருந்து நிலையத்தில் உங்களுக்கான ஆசனப் பதிவுகளை மேற்கொள்ளலாம். (சு)

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் முல்லையில் முன்பள்ளிகள் திறப்பு




(முல்லைத்தீவு)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கள்ளப்பாட்டில் நடைமுறைப் படுத்தப்பட்டு வந்த முகிலன் போசாக்கு பூங்கா சுனாமியினால் முற்று முழுதாக அழிந்துள்ள நிலையில் இக்கிராம மக்கள் தற்காலிகமாக தற்போது குடியமர்த்தப்பட்ட உண்ணாப்பிலவு கிராமத்தில் இரண்டு முன்பள்ளிகள் இந் நிறுவனத்தால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

முல்லை மக்கள் நலன்புரிச் சங்கத்தினால் நிர்வாக அலுவலகர் தலைமையில் கடந்த வாரம் இந் நிகழ்வுகள் இடம் பெற்றன.

கற்றல் உபகரணங்கள், பாடசாலைப் பை, கதிரை, அலுமாரி என்பன சிறுவர்களுக்கு வேள்விசன் நிறுவனத்தினரால் வழங்கப்பட்டன. இந்த முன் பள்ளி த.பு கழகத்தினால் நடைமுறைப் படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (20,46)

# நிறுத்தலளவைக் கருவிகள் முத்திரையிடும் நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

நிறுத்தலளவைக் கருவிகளை சரிபார்த்து முத்திரையிடும் நடவடிக்கைகளை மல்லாவிப் பகுதியில் வருவாய்ப்பகுதி நிறுத்தலளவைப் பிரிவினர் தற்போது மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பெற்றுள்ள நிறுத்தலளவைக் கருவிகளை சரிபார்த்து முத்திரையிடும் நடவடிக்கைகள் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை மல்லாவிப்பிரதேசத்தில் அமைந்துள்ள வருவாய்ப் பகுதிச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இப்பகுதியில் நிறுத்தலளவைக் கருவிகளைப் பயன்படுத்தும் அனைவரும் மேற்குறிக்கப்பட்டுள்ள நாட்களுக்குள் அவற்றிற்கு முத்திரையிட்டுக் கொள்ளுமாறு வருவாய்ப் பகுதி நிறுத்தலளவைப் பிரிவு ஆளுகை அலுவலர் வேண்டியுள்ளார். (சோ)

# கிளிநொச்சி நகரப் பகுதியில் தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கை



விழிப்புணர்வு பிரகரம் ஒட்டும்பணி

(அலுவக செய்தியாளர்)

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரும், கரைச்சி பிரதேச சபையினரும்,கிளிநொச்சி மலேரியா பூச்சியியல் பகுதியினரும் இணைந்து நேற்று, கிளிநொச்சி நகரப்பகுதி உணவுச் சாலைகள், வியாபார நிலையங்கள் என்பவற்றில் தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சி நகரப் பகுதியில் உள்ள உணவுச் சாலைகளில் மேற்படி நடவடிக்கைகளை மேற்கொண்ட இக் குழுவினர்,உணவகங்களில் இருந்த தரமற்ற உணவுப் பொருட்களை இனங்கண்டு அழித்தனர். உணவுச் சாலைகளுக்கேற்ற வகையில் அமைக்கப் பெற்றிராத உணவகங்களை தேநீர்ச்சாலையாக இயங்குவதற்கு அநுமதி வழங்கப்பட்டது. அத்துடன் சுகாதாரத்தைப் பேணும் அறிவுறுத்தல் துண்டுப்பிரசுங்களும் சகல உணவு வகைகளைகையாளும் நிலையங்களுக்கும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# அன்னையர் முன்னணியின் ஒன்று கூடல் நிகழ்வு

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்ட அன்னையர் முன்னணியின் மாதாந்த ஒன்று கூடல் முள்ளியவளை அரசியல் துறை செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

அன்னையர் முன்னணியின் தலைவி திருமதி கௌசி புத்திரி தலைமையில் ஆரம்பமானது. இந் நிகழ்வில் முல்லை மகளிர் அரசியல் துறை பொறுப்பாளர் வேழினி கருத்துரை வழங்கினர்.

இக் கலந்துரையாடலில் உலக பெண்கள் நாள் தொடர்பாகவும், இவ்வாண்டு முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டம் தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டது. (20,08)

### -சுனாமி உளப்பாதிப்பை குறைக்க

# பாடசாலை மட்டத்தில் ஆற்றுப்படுத்தல் நடவடிக்கை

சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு பிரதேச மாணவர்களின் உளநிலைப் பாதிப்பை குறைக்கும் நோக்குடன் பாடசாலை மட்டத்திலான ஆற்றுப்படுத்தல் நிகழ்வு இடம் பெற்று வருகின்றது.

முல்லை வலய ஆசிரியர்களும், முல்லை அரங்கச் செயற்பாட்டுக் குழுவினரும் இணைந்து ஜி.ரி.இசட் நிறுவனத்தின் ஆதரவுடன் கடந்த முதலாம் திகதி முதல் இதனை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

கள்ளப்பாடு அ.தக.பாடசாலையிலும் முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க பாடசாலையிலும் இந்த ஆற்றுப்படுத்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.

மாணவர்களும்,ஆசிரியர்களும் மிகவும் மகிழ்சியுடன் இதில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

# தமிழர் புனர்வாழ்வுக்கழகம் 758 வீடுகள் அமைப்பு

சுனாமியால் பாதிக்கப்பட்ட யாழ்.வடமராட்சி கிழக்கு பகுதி மக்களுக்கென தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரால் 758 வீடுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

வெவ்வேறு இடங்களில் 14 தொகுதிளாக அமைக்கப்பட்டு வரும் இவ் வீடு அமைப்பு திட்டங்கள் துரிதகதியில் நகர்த்தப்பட்டு வருகின்றன.

இதேவேளை வடமராட்சி கிழக்கு மக்களுக்கென தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் அமைக்கப்பட்ட வீடுகள் 30 ஏற்கனவே பாதிக்கப்பட்டவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளன. (33)

## பெண்கள் அபிவிருத்திக் கூட்டம்

(உடையார்கட்டு)

உடையார் கட்டு தெற்கு பிரதேச பெண்கள் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று இடம் பெறவுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஏற்பாட்டில் பிற்பகல் 2.00 மணிக்கு குரவில் தமிழ் வித்தியாலயத்தில் இந்நிகழ்வு நடைபெறும்.

இப்பகுதி பெண்கள் அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளது. (19)

## பணி நலன்பாராட்டு

(யாழ்ப்பாணம்)

சைவப்புலவர் வல்லிபுரம் கந்தசாமியின் பணி நலன் பாராட்டு விழா நாளை நடைபெறவுள்ளது.

நீராவியடியில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் முற்பகல் 9.00 மணிக்கு சைவ பரிபாலன சபை உபதலைவர் இ.குகதாசன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெறும்.

யாழ்பாணம் சைவ பரிபாலன சபையில் கால்நூற்றாண்டுகளுக்கு மேலாகப் பரீட்சைச் செயலாளராகவும் தற்போதைய தலைவராகவும் இவர் சேவையாற்றியுள்ளார்

# வியாபார அபிவிருத்தி நிலையத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை வியாபார அபிவிருத்தி நிறுவனத்தின் வட பிராந்தியத்துக்கான வியாபார அபிவிருத்தி நிலையம் நாளை மறுதினம் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபரும் சிறப்பு விருந்தினர்களாக தமிழீழ விடுதலைப்புலிகளின் வணிக ஒன்றியப் பொறுப்பாளரும், வியாபார சேவைகள் உதவிகள் வழங்கும் நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளரும், யாழ்ப்பாண பிரதேச செயலாளரும் கலந்து கொள்ளவுள்ளனர்.


# அறிவித்தல்

எதிர்வரும் 07.03.2005 திங்கட்கிழமை தொடக்கம் கரைச்சிப் பிரதேச சபையினரால் நடைமுறைப் படுத்தப்படவுள்ள சில ஒழுங்கு நடவடிக்கைகள் தொடர்பாகவும், வர்த்தகர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் கிளிநொச்சிப் பிரதேச அரசியல்துறை பொறுப்பாளர், திரு.போர்ப்பிரியன்-கிளிநொச்சி மாவட்ட தொழிற்சங்கப் பொறுப்பாளர் திரு.அருள் அவர்களுடனும் கலந்துரையாடப்பட்டது. இக்கலந்துரையாடலில் வர்த்தகர்கள் சட்ட நடைமுறைகளை அனுசரித்து நடப்பதுடன் கிளிநொச்சி வர்த்தகர்கள் அனைவரும் கரைச்சிப் பிரதேச சபையின் வேண்டுகைக்கு அமைவாக நடக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

(சி.11379) வர்த்தகர் சங்கம், கிளிநொச்சி

# மாணவி கோரப்பலி; மக்கள் கொந்தளிப்பு


வைத்தியசாலையில் மாணவிக்குச்சிகிச்சை...


பலியான மாணவி


எரியும் கலட்டி அப்பக்கடை...


எரியும் விமானப்படையின் ஜீப்...


ஆலடிச் சந்தியில் காவலரண் எரிகிறது...


மக்கள் கொந்தளிப்பு..


மாணவர்கள் ஆவேசம்...


சமரசமுயற்சியில்...

படப்பிடிப்புகள்:- செல்வா,தயாபரன், ஆன்சிலின்,சுஜீவன்

## தென்மராட்சி உயர் பாதுகாப்பு வலயத்தில்; படையினரால் பயன் தரு மரங்கள் அழிப்பு

(தென்மராட்சி)

**தென்மராட்சியில் மறவன்புலோ, தனங்கிளப்புப் பகுதிகளில் உள்ள பனை, தென்னை மரங்கள் படையினரால் தறிக்கப்பட்டு வருகின்றன.உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் சிறிலங்காப் படை யினரால் இப்பகுதிகள் ஆக் கிரமிக்கப்பட்டுள்ளன.**

இப் பகுதியில் நிலை கொண்டுள்ள படையினர். கடந்த இரு வாரங்களாக இந் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறு தறிக்கப்படும் மரங்கள் இராணுவத்தினரின் படைத்தள மற்றும் காவலரண் பலப்படுத்தல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

படையினரின் இந் நடவடிக்கைகளால் அப்பகுதி வெட்ட வெளியாகக் காட்சியளிக்கின்றது.

படையினரின் இந் நடவடிக்கை குறித்து மக்கள் கவலையும், விசனமும் தெரிவித்துள்ளனர். (28)

-சாவகச்சேரி நகரப் பகுதியில்-

## பொலிசாரின் அனுசரணையுடன் நடைபெறும் கசிப்பு விற்பனை

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகரை அண்டிய பகுதிகளில் சிறிலங்கா பொலிசாரின் அனுசரணையுடன் கசிப்பு விற்பனை இடம்பெற்று வருவதாக பொதுமக்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

நகரை அண்டியதாக கச்சாய் வீதிப் பகுதியில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனால் இப் பகுதியில் இளைஞர்கள் உட்பட பல்வேறு தரப்பினரும் இரவு வேளைகளில் சமூகச் சீர்கேட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் பொலிசாரும் சிவில் உடையில் இப் பகுதிகளுக்குச் சென்று கசிப்பு அருந்தி வருவதாகவும், தெரிவிக்கப்படுகின்றது. எனவே சம்பந்தப்பட்டோர் இவ் விடயம் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டுமென பொது மக்க ளால் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. (28)

-யாழ் .இல் கட்டடத்தேவைகளுக்கான-

## மணல் விநியோகம் திங்கள் முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சுனாமி அனர்த்தம் காரணமாகத் தடைப்பட்டிருந்த கட்டடத் தேவைகளுக்கான மணல் விநியோகம் மீண்டும் வடமராட்சி கிழக்குப் புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனத்தால் நாளை மறுதினம் முதல் விநியோகிக்கப்படுமென யாழ்.அரசாங்க அதிபர் கே.கணேஸ் அறிவித்துள்ளார்.

மணல் கொண்டு செல்வதற்கான வழி அனுமதிப் பத்திரமும் முன்னர் போன்று வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபரின் தும்பளை உப பணிமனையினால் வழங்கப்படும். மணல் தேவையேற்படுவோர் இப் பணிமனைகளுடன் தொடர்பு கொள்ளலாம்.

மீளக் குடியமர்தல்,புனர்வாழ்வு புனரமைப்பு, மீள்கட்டுமான அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ள நிறுவனங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் மணல் விநியோகிக்கப்படும். இவற்றிற்கு அரசாங்க அதிபரின் சிபாரிசு தேவையில்லையெனவும் அவர் அறிவித்துள்ளார்.

## சந்திப்பு

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தினர் யாழ்ப்பாணத்தில் ஊடகவியாலாளர்களைச் சந்திக்கவுள் ளனர்.

இன்று பிற்பகல் 3.00மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் இச்சந்திப்பு இடம் பெறவுள்ளது. தேசிய திரைப் படக்கூட்டத் தாபனத்தின் நிகழ் கால மற்றும் எதிர்காலப் பணி தொடர்பாக இச் சந்திப்பில் எடுத்துரைக்கப்படவுள்ளது.

## வடமராட்சியில் படையினருக்கு எதிராக வெகுசனப் போராட்டங்கள் நடத்த முஸ்தீபு!

(வடமராட்சி)

உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக இடம்பெயர்ந்த வடமராட்சி மக்கள் தம்மை மீள் குடியேற்றக் கோரி வெகுசனப் போராட்டங்களை நடத்தவுள்ளனர். கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன.

உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக இப் பகுதி மக்கள் சக்கோட்டை மற்றும் பொலிகண்டிப் பகுதிகளில் குடியமர்ந்திருந்தனர். எனினும் அண்மைய சுனாமிப் பேரலை காரணமாக அந்த மக்கள் மீண்டும் நிர்க்கதியான நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

இந்த நிலையில் அதியுயர் பாதுகாப்பு வலயமாக உள்ள போதும் படையினர் தங்கியிருக்காத தொண்டமனாறு மற்றும் வளலாய் கரையோரப் பகுதிகளில் தம்மைக் குடியமர்த்த வேண்டுமெனக் கடற்றொழிலாளர் சங்கம் கோரியுள்ளது.

இந்தக் கோரிக்கை சர்வதேச சமூகம் மற்றும் இலங்கை அரசாங்கத்திடம் விடுக்கப்பட்டுள்ளது. இது நிறைவேற்றப்படாவிட்டால் வெகுசனப் போராட்டங்கள் நடத்தப்படும் என்றும் கடற்றொழிலாளர் சங்கம் எச்சரித்துள்ளது. (27)

## கர்ப்பிணிகள் பரிசோதனை நிலையம்; இயங்க நடவடிக்கை எடுக்குக!

ஏழாலை ஸ்ரீ முருகபுர மகளிர் அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் இயங்கி வந்த கர்ப்பிணிப் பெண்கள் பரிசோதனை நிலையத்தை மீண்டும் இயங்க நடவடிக்கையெடுக்கும்படி கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.


வடபிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வலிதெற்கு பிரதேச செயலாளர் ஆகியோருக்கு ஸ்ரீ முருகபுர மகளிர் அபிவிருத்திச் சங்கத்தினர் இது தொடர்பாக மகஜர்களைக் கையளித்துள்ளனர்.

இம் மகஜரில் கடந்த இடப்பெயர்வுக்கு முன்னர் இப்பகுதியில் கர்ப்பிணிப்பெண்கள் மற்றும் குழந்தைகளின் சிகிச்சை நிலையம் இயங்கி வந்துள்ளது. தற்போது குழந்தைகள் பரிசோதனைக்கான நிலையம் இயங்குடுகின்ற பொழுதிலும் கர்ப்பிணிப்பெண்களுக்கான கிசிச்சை நிலையம் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது இதனை மக்களின் நன்மை கருதி மீண்டும் அதே இடத்தில் இயங்க நடவடிக்கையெடுக்க வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது. (41)

# மழை நீர் சுத்திகரிப்பு தொட்டி வைபவ ரீதியாக அறிமுகம்

(அலுவலக செய்தியாளர்)

**கிளிநொச்சி மாவட்டத்தில் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய வளாகத்தில் அமைக்கப்பட்ட மழைநீர் சுத்திகரிப்பு தொட்டி கடந்த புதன் கிழமை வைபவரீதியாக அறிமுகம் செய்யப்பட்டது.**



கிளிநொச்சி அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய வளாகத்தில் காலை 10.30 மணிக்கு றீடோ நிறுவன தலைமை இணைப்பாளர் சீலன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. இதன் ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கினை நீர் முகாமைத்துவ ஆய்வு நிபுணர் தனுஜா ஆரியநந்த இணையத்தலைவர் க.கணேச பிள்ளை "றீடோ" திட்ட இணைப்பாளர் ஜீவன் ஆகியோா ஏற்றி வைத்தனர்.

அடுத்து புதிதாக அமைக்கப்பட்ட நீர்த்தாங்கியினை கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி சதாநந்தன் வைபவரீதியாக அறிமுகம் செய்து வைத்தார். தொடர்ந்து நீர்த் தொட்டி அமைக்க பயிற்சி வழங்கப்பட்ட 10 பயிற்சியாளர் களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (கு.சோ)

## வீதி விபத்தில் இளைஞன் படுகாயம்

(அலுவலக செய்தியாளர்)

மோட்டார் கார் ஒன்று ஈருருளி யுடன் மோதியதில் ஈருருளியில் பயணித்தவர் படுகாயங்களுக் குள்ளான நிலையில் கிளி. மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டு, அவரச சிகிச்சைக்குட் படுத்தப்பட்டு, மேலதிக சிகிச்சை யின் பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.



மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணி யளவில் கிளிநொச்சி டிப்போச் சந்திக்கருகாமையில் ஏ-9 பிரதான வீதியில் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சியிலிருந்து டிப்போச் சந்தி நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் காரும் டிப்போச் சந்தியிலிருந்து கிளிநொச்சி நோக்கி வந்து கொண் டிந்த ஈருருளியும் விபத்தில் சிக்கிக்கொண்டன.

ஈருருளியில் பயணித்த கிளிநொச்சி செல்வாநகரைச் சேர்ந்த இராம - இராமலிங்கம் (வயது - 26) என்பவரே இச்சம்ப வத்தில் படு காயமடைந்து தற்போது யாழ் போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருபவராவார்.

மேற்படி விபத்துக் குறித்து விசாரணைகளை தமிழீழ வீதிப் போக்கு வரத்துக் காவல் துறை யினர் மேற்கொண்டு வருகின்றமை குறிப் பிடத்தக்கது (சோ)

## கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் 2005 ஆம் ஆண்டிற்கான விளை யாட்டு அபிவிருத்திக்குரிய முக்கிய கலந்துரையாடல் எதிர் வரும் 10 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு புதுக்குடியிருப் பிலுள்ள முல்லை மாவட்ட அரசியல் துறை செயலகத்தில் நடைபெறவுள்ளது.

முல்லை மாவட்டத்திற்குட்பட்ட விளையாட்டு உத்தியோகத்தர்கள், விளையாட்டுக் கழகங்களின் தலை வர், செயலாளர் மற்றும் விளை யாட்டு வீரர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு முல்லை மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுபாளர் கமல் கேட்டுள்ளார். (08)

## - சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்காக -
## தனது பிறந்த நாளை முன்னிட்டு அன்பர் ஒருவர் ஒரு இலட்சம் ரூபா நிதி உதவி

சுனாமிப் பேரலையினா[illegible] பாதிக்க[illegible]ப்பட்ட சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்காக யாழ்.மாவட்டதத்திலுள்ள இருபாலை எக்ஸ்பிரஸ் கல்வி நிலைய இயக்குனரா[illegible] வரதராஜன் அவர்கள் தனது 50ஆவது பிறந்த நாளை முன்னிட்டு [illegible]ந்த செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணியள வில் யாழ்.மாவட[illegible] [illegible]ழர் புனர்வாழ்வு[illegible] [illegible]ழகப் பணிப்பாளரிடம் ஒரு இலட்சம் ரூபா [illegible]னை கையளித்துள்ளார்.

இதேவேளை [illegible]மிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கா[illegible] இலங்கை வங்கி முகாமையாளரும், பணியாளர்களும் இணைந்து பதினாறாயிரத்து ஐந்நூறு ரூபா நிதியினை யாழ்.மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளரிடம் வழங்கியுள்ளனர்.

கையளிக்கப்பட்ட நிதியினைப் பெற்றுக்கொண்ட பணிப்பாளர் ஜெயராஜ் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், மனிதாபிமான ரீதியிலான இவ்விரு நிதிப் பங்களிப்பும் சமகாலத்தில் தமிழர் புனர்வாழ் வுக் கழகத்தினரால் முன்னெடுக்கப்பட்டுவரும் புனரமைப்புப் பணிகளை மென்மேலும் ஊக்கப்படுத்துவதாக அமைகின்றதெனக் கூறித் தனது நன்றி யையும் தெரிவித்தார்.

## முல்லை மக்களுக்கு மன்னார் மக்கள் உதவி

(மன்னார்)

முல்லைத்தீவில் சுனாமியால் பாதிக்கப்பட்டு முள்ளியவளை நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்களுக்கு தற்காலிக கொட்டகைகளை அமைப்பதற்காக மன்னார் பிரசைகள் குழுவினர் ஒரு இலட்சம் ரூபா பெறுமதி யான கிடுகுகள், மரங்களை வழங்கியுள்ளனர்.மேலும் அப்பகுதியில் வசிக்கும் மக்களிற்கென கௌப்பி,பயறு, கடலை அத்துடன் கருவாடு போன்ற பொருட்களையும் அனுப்பியுள்ளனர். (18)

## 2005 ஆம் ஆண்டிற்கான அனுமதியைப்பெறக் கோரிக்கை

(மல்லாவி)

பாண்டியன்குளம் துணுக் காய்ப் பிரதேசங்களில் கீழ் உள்ள உணவு கையாளும் நிலையங்கள், பல்பொருள்வாணிபங்கள், அரிசி யாலை, சிகை அலங்கரிப்பு நிலை யங்கள் அனைத்தும் 2005ஆம் ஆண்டிற்கான அனுமதியைப் பெற மல்லாவி அரசியல்துறை செயல கத்தில் இயங்கி வருகின்ற தமிழீழ சுகாதார சேவைகள் பணிமனை யுடன் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளுமாறு தமிழீழ சுகாதார சேவை இணைப் பாளர் ஜி.அரவிந்தன் கே[illegible]ள்ளார். (24)

## பயிர்ச்செய்கைக் கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி- புதுமுறிப்புக் குளம் சிறு[illegible]போக பயிர்ச்செய்கைக் கூட்டம் [illegible]வரும் 7 ஆம் திகதி காலை [illegible] மணிக்கு புதுமுறிப்ப விக்கினேஸ்வரா வித்தியாலயத்த் நடைபெறவுள்ளது.

கரைச்சிப் பிரதேச செயலர் செல்வி க.சுலோஜினி தலைமை யில் நடைபெறவுள்ள மேற்படி கூட்டத்தில் சிறுபோக வேளாண்மை செய்கை பற்றிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதால் மேற்படி குளத்தின் கீழ் நெற்செய்கையி லீடுபட்டுள்ளவர்கள் அனைவரை யும் அன்றையதினம் நடைபெறும் கூட்டத்திற்கு தவறாது சமுகமளிக் கும் வண்ணம் வேண்டப்பட்டுள் ளனர். (சோ)

## மன்னார் விவசாயிகளுக்கு உழவு இயந்திரம் வழங்கல்

நெதர்லாந்து நிதியுதவியுடன் "நிகொட்" நிறுவன திட்டத்தின் கீழ் 65 இலட்சம் ரூபா பெறுமதியான 10 நான்கு சில்லு உழவு இயந்திரங் களும், பெட்டிகளும் மன்னார் மாவட்டத்தின் 10 கமநல கேந்திர நிலைய விவசாயிகளுக்கு நேற்று மாலை 3.00 மணியளவில் வழங் கப்பட்டுள்ளதாக.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் மன்னார் பிரதேச இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் தலைமையுரை யினை திருமதி ஸ்ரான்லி (உதவி ஆணையாளர் கமநல அபிவிருத்தி திணைக்களம் மன்னார் மாவட்டம்) சிறப்பு விருந்தினர் உரையினை கே.இராஜரட்ணம் (மாவட்ட உதவி திட்டப்பணிப்பாளர் நிகொட்) வே.விஸ்வலிங்கம் (அரச அதிபர் மன்னார் மாவட்டம்) மற்றும் மேலதிக அரசாங்க அதிபர் அ.நீக்லெக்ஸ் பிள்ளை, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் இணைப்பாளர் பிறேம்குமார், மன்னார் பிரதேச இணைப்பாளர் றெஜி ஆகியோர் நிகழ்த்தினர், அடம்பன் பிரதேச இணைப்பாளர் காந்தன் மற்றும் 10 விவசாய அமைப்புக்களின் தலைவர், செய லாளர்கள், விவசாய உத்தி யோகத்தர்களும் இதில் கலந்து கொண்டனர்.

## முல்லைத்தீவில் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளருக்கு வீச்சு வலை

முல்லையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளரின் வாழ்வு நிலையினை மேம்படுத்தும் நோக்குடன் முதற் கட்டமாக இரு நூறு வீச்சு வலைகள் வழங்கப் பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்ட கடற் றொழிலாளர் கூட்டுறவு சங்கசமா சத்தின் அனுசரணையுடன் சுனாமி யால் பாதிப்புற்ற முல்லை வாழ் மக்களின் மீள் கட்டமைப்பு நிலை யத்தினராலேயே இந்த வீச்சு வலை வழங்கப்பட்டன. கடற்றொழி லாளர் கூட்டுறவு சங்க சமாசத்தின் தலைவர் அ.மரியராசா தலைமை யில் நேற்று முன்தினம் காலை 10.30 மணிக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசத்தில் வைத்து இவை வழங்கப்பட்டன.

மேலும் 200 வீச்சு வலைகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருவதாகவும் சங்கம் தெரிவித்துள்ளது. (20)

## அங்குரார்ப்பண கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கணேசபுர கிராம மாதர் அபிவிருத்திச்சங்கக் கூட்டம் அண்மையில் கணேசபுரம் கிராம அலுவலர் அலுவலகத்தில் நடை பெற்றது.

கணேசபுரம் கிராம அபிவிருத் திச்சங்கத் தலைவர் செ.சண்முக நாதன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் கரைச்சிப் பிரதேச சபை செயலர் வெ.குலேந் திரன், பெண்கள் அபிவிருத்தி புனர் வாழ்வு நிறுவனத்தைச் சேர்ந்த செல்வி, கிராம சேவை அலுவலர் இந்திரன் ஆகியோர் மேற்படி அங் குரார்ப்பண வைபவத்தில் கலந்து கொண்டனர்.

கணேசபுரம் மாதர் சங்க நடப் பாண்டு நிர்வாகிகளாக பின்வரு வோர் தெரிவு செய்யப்பெற்றனர். திருமதி. இ. யோகரத்தினம் தலைவி, திருமதி.பி.வசந்தமாலா துணைத்தலைவி, திருமதி. லா.ஸ்ரீ பன் செயலர், திருமதி. ச.வெங் கடாசலபதி துணைச்செயலர், திருமதி.செ.சிவஞானம் பொரு ளாளர், மற்றும் ஆறு நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய் யப்பெற்றனர். (சோ)

## காவல் துறையின் சீர்திருத்தப் பிரிவிற்கு சர்.செ.சங்கப் பிரதிநிதிகள் விஜயம்

தமிழீழ காவல்துறையின் புதுக்குடி யிருப்பு ஆனந்தபுரம் சீர்திருத்தப் பிரிவிற்கு சர்வதேச செஞ்சிலு வைச் சங்க பிரதிநிதிகள் கடந்த புதன் கிழமையும் நேற்று முன்தினமும விஜயம் செய்துள்ளனர் ச்வதேச செஞ சிலுவைச் சங்கபுதுக் குடியிருப்பு அலுவல கத்தைச் சேர்ந்த மக் யிலேடயம்ஸ பமெல்லா ஸ்ர தாகிஸ் மற்றும் சங்கத்தின் கிளிநொச்சி அலுவலகத்தைச் சேர்ந்த ஒவ்லின் மெயர் ஆகியோரே இந்த விஜயத்தை மேற் கொண்டனர்.



## சைவ நெறி வினாவிடைப் போட்டி

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட திருநெறிக் கழகத்தினர் சிவராத்திரி தினத்தினை முன்னிட்டு கிளிநொச்சி பாடசாலை மாணவர்கள் மத்தியில் சைவ நெறி வினாவிடைப் போட்டியினை நடாத்தவுள்ளனர்.

மேற்படி சைவ நெறி வினாவிடைப் போட்டி ஆறாம் திகதி காலை ஒன்பது மணிக்கு கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. போட்டியில் பங்குபற்றும் மாணவர்களை தெரிவுப் போட்டி நடைபெறும் இடத்திற்கு உரியநேரத்திற்கு சமுகமளிக்கும் வண்ணம் திருநெறிக்கழக தலைவர் வே.மகாலிங்கம் வேண்டியுள்ளார். (சோ)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# அரசமைப்பதில் நெருக்கடி தொடர்கிறது

# ஈராக் பாராளுமன்றம் கூடுவதில் தாமதம்!

(பாக்தாத்)

**ஈராக்கில் கூட்டணி அரசு அமைப்பது தொடர்பாக ஷியா முஸ்லிம்களுக்கும் குர்திஷ் இன மக்களுக்குமிடையே நடந்த பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தது. இதையடுத்து புதிய பாராளுமன்றத்தின் முதல் கூட்டத்தைக் கூட்டுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.**

குர்திஷ், ஷியா முஸ்லிம் தலைவர்களிடையே வடக்கு ஈராக்கில் பேச்சுவார்த்தை நடந்துவரும் நிலையில் பாக்தாத்தில் நேற்று முன்தினம் நடந்த இரு கார்க்குண்டுவெடிப்புச் சம்பவங்களில் ஈராக் படையினர், பொலிசார் உட்பட 14 பேர் கொல்லப்பட்டனர். ஈராக்கில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டணி அரசை அமைப்பது மிகவும் சிக்கலான காரியமாகவுள்ளது.

வடக்கு ஈராக்கில் இர்பில் நகரில் இருதரப்பினருக்குமிடையே நடந்த பேச்சில் எந்தவித உடன்பாடும் எட்டப்படவில்லை.

பிரதமர் பதவிக்கு இப்ராகிம் அல்-ஜாபாரியை நியமிக்க வேண்டும் என்று மதப் பழைமைவாதிகள் கோரி வருகின்றனர்.

இந்நிலையில் கூட்டணி அரசு அமைப்பதற்கான பேச்சுவார்த்தை 50 சதவீதம் தான் முடிவடைந்துள்ளது. 275 உறுப்பினர்கள் கொண்ட ஈராக் பாராளுமன்றத்தில் 140 தொகுதிகளைக் கைப்பற்றிய ஷியா பிரிவு தலைமையிலான ஐக்கிய ஈராக்கியக் கூட்டணி அறுதிப் பெரும்பான்மையைப் பெறுவதற்காக குர்திஷ் இனத்தைச் சேர்ந்த அரசியல் கட்சிகளிலிருந்து 75 உறுப்பினர்களின் ஆதரவைப் பெறும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளது.



பிரித்தானிய இளவரசர் சாள்ஸ் (வலம் இரண்டாம்) அவுஸ்திரேலிய பிரதம மந்திரி ஜோன்கவாட் (இடது) ஆளுநர் மைக்கல் ஜெப்ரி (வலம்) ஜெப்ரியின் மனைவி ஆகியோர் சாள்ஸ்சை வரவேற்கும் வைபவத்தில சந்திக்கின்றனா.

## வடகொரியா எச்சரிக்கை

தீய சக்தி என்றும் கொடுங்கோல் ஆட்சியின் காவற் பீடம் என்றும் அமெரிக்கா எங்களை திட்டித் தீர்த்துள்ளது. இப்படி திட்டியதற்காக அந்த நாடு மன்னிப்புக் கேட்கவேண்டும் என்று வட கொரியா வலியுறுத்தியுள்ளது. அதோடு நீண்ட தூர ஏவுகணை சோதனை நடத்தப்போவதாகவும் வடகொரியா எச்சரித்துள்ளது.



பாக்தாத்தில் பகுபா பிரதேசத்தில் பொதுமக்கள் அவசர அலகின் தலைமையகத்திற்கு முன்னால் குண்டுத்தாக்குதலில் அழிக்கப்பட்ட வாகனத்தின் சிதைவுகளை ஒரு அமெரிக்க கவச வாகனம் விரைவாகக் கடந்து செல்கிறது.

# ஈராக் உள்துறை அமைச்சக வளாகமருகே அடுத்தடுத்து இரு கார்க் குண்டுத் தாக்குதல்கள்!

## 14பேர் உடல் சிதறிப்பலி

(பாக்தாத்)

ஈராக்கில் இரு இடங்களில் நடந்த கார்க் குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 14 பேர் உயிரிழந்தனர். இச்சம்பவங்கள் தலைநகர் பாக்தாத்தில் நேற்றுமுன் தினம் நடந்தன.

உள்துறை அமைச்சகம் அமைந்துள்ள வளாகத்தின் வெளியே இச்சம்பவங்கள் காலை 7.30 மணிக்கு நடந்தன. பாதுகாப்பு மிகுந்த வாயில் வழியாக உள் நுழைந்த கார் வெடித்துச் சிதறியது. அதன் தாக்கம் குறைவாக இருந்தாலும் அதனால் ஏற்பட்ட புகை மண்டலத்தில் எதுவுமே தெரியவில்லை என்று சம்பவத்தை நேரில் பார்த்த பொலிஸ் ஒருவர் தெரிவித்தார்.

அதன் பிறகு இரு நிமிடங்கள் கழித்து அங்கு வந்த ஜீப்பில் இருந்த தீவிரவாதிகள் இயந்திரத் துப்பாக்கியால் கண்மூடித்தனமாகச் சுட்டனர். பாதுகாப்புப் படையினர் திருப்பிச் சுட்டபோது ஜீப் வெடித்துச் சிதறியது.



அமைச்சக வளாகமருகே பாதுகாப்பு

இச்சம்பவங்கள் நடைபெறுவதற்கு முன்பு ராணுவச் சோதனை முகாம் மீது தீவிரவாதிகள் ரொக்கெட் தாக்குதல் நடத்தினர் என்று உள்துறை அமைச்சகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# தென்மேற்கு பாகிஸ்தான் கடும் மழையால் பாதிப்பு!

## -ஆயிரக்கணக்கான மக்கள் இடம் பெயர்வு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் தென்மேற்குப் பகுதியில் கடந்த சில நாட்களாக மழைபெய்து வருகின்றது. ஏற்கனவே கடந்த மாதம் பெரும் சேதத்தை ஏற்படுத்தி விட்டு ஓய்ந்த மழை மீண்டும் இப்போது வலுவடைந்திருக்கிறது. பலூசிஸ்தான் மாகாணம் குவெட்டா, காத்குச்சா, குஸ்லா அப்துல்லா, போன்ற பகுதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

கடலோரப்பகுதி கிராமங்களும், தாழ்வான கிராமங்களும் வெள்ளத்தில் மூழ்கிக்கிடக்கின்றன. 25 ஆயிரம் பேர் வீடிழந்து தவிக்கிறார்கள். குவாடார் கடற்கரைக் கிராமத்தில் மட்டும் 6500 வீடுகள் இடிந்து விட்டன.

# விமானத்தில் தனியாக உலகைச் சுற்றி அறுபது வயது கோடீஸ்வரர் சாதனை!

(சிகாகோ)

விமானத்தில் தன்னந்தனியாக இடைத்தங்கலின்றி உலகத்தைச் சுற்றிவர முயன்ற அமெரிக்கக் கோடீஸ்வரர் மூன்று நாட்களில் உலகைச் சுற்றி வந்து சாதனை படைத்துள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்த கோடீஸ்வரர் ஸ்டீவ் பாசெட் (60 வயது) சாதனைகள் நிகழ்த்துவதில் ஆர்வமுள்ளவர் முதன் முதலாக பலூனில் தனியாக உலகத்தை வலம் வந்து சாதனை புரிந்தவர்.

இவர் விமானத்தை தன்னந் தனியாக ஓட்டியபடி எங்கும் நிற்காமல் உலகத்தை மூன்று நாட்களில் சுற்றி வந்து இந்தச் சாதனையைப் படைத்துள்ளார்.

மூன்று நாட்களில் அவர் 37 ஆயிரம் கி.மீ. தூரத்தை கடந்து உலகத்தைச் சுற்றிய முதல் மனிதர் என்று பெயர் பெற விரும்பினார்.

இதற்காக அமெரிக்காவில் கன்சாஸ் மாநிலத்தின் சலீனா விமான நிலையத்தில் இருந்து கடந்த திங்கட்கிழமை இரவு புறப்பட்ட இவர் தான் விரும்பியவாறே மூன்று நாட்கள் உலகத்தைச் சுற்றிய பின்னர் அதே விமான நிலையத்தில் தனது சாதனையைப் படைத்து தரை இறங்கினார்.

விமான நிலையத்தில் கூடி இருந்தவர்களிடம் கருத்துத் தெரிவித்த இவர் தனது இலட்சியம் நிறைவேறிவிட்டது எனக் கூறினார்.

# சட்டவிரோதமாக குடியேறுவோரின் குழந்தைகளுக்கும் குடியுரிமையளிக்க அமெரிக்க அரசு மறுப்பு!

(வோஷிங்டன்)

சட்டவிரோதமாக அமெரிக்காவில் குடியேறுவோரின் குழந்தைகளுக்குக் குடியுரிமை மறுக்கும் வகையில் அந்நாட்டின் சட்டம் திருத்தப்படுகிறது.

தற்போதுள்ள சட்டங்களின் படி அமெரிக்காவில் பிறக்கும் அனைத்துக் குழந்தைகளுக்கும் தானாகவே அந்நாட்டின் குடியுரிமை கிடைத்துவிடும்.

புதிய சட்டதிருத்தத்தின் மூலம் சட்டவிரோதக் குடியேற்றங்களைத் தடுக்கலாம் என்று சட்ட வல்லுநர்கள் கூறுகின்றனர். அதேவேளையில் இத்திருத்தம் அமெரிக்க அரசியல் சட்டத்திற்கு எதிரானது என்று இதை எதிர்ப்பவர்கள் கூறுகின்றனர்.

தற்போது சட்டவிரோதமாக அமெரிக்காவில் குடியேறியவர்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் இரண்டு முதல் மூன்று இலட்சம் குழந்தைகள் வரை பிறக்கின்றன என்று அமெரிக்கக் குடியேற்ற ஆய்வு மையம் கூறியுள்ளது.

## சட்டவிரோத மது அருந்திய எண்மர் உயிரிழப்பு!

துருக்கியில் சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட மதுவைக் குடித்ததில் எட்டுப்பேர் உயிரிழந்துள்ளதுடன் 40 இற்கு மேற்பட்டோர் கவலைக்கிடமான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பல்வேறு இராசயன பொருட்களைக் கொண்டு இம் மது தயாரிக்கப்பட்டுள்ளமை விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது. இதனைத் தொடர்ந்து சட்டவிரோத மது உற்பத்தியாளர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை துருக்கி அரசு முடக்கி விட்டுள்ளது.

# பாடசாலைக் கட்டடம் இடிந்ததில் சீனாவில் 20 மாணவர்கள் பலி!

(பெய்ஜிங்)

சீனாவில் நிலக்கரிச் சுரங்க உரிமையாளர் ஒருவர் வீட்டில் திருட்டுத்தனமாகப் பதுக்கி வைத்திருந்த குண்டு வெடித்தது. இதில் அருகேயுள்ள பாடசாலைக்கட்டடம் இடிந்து விழுந்தது. அப்போது அங்கிருந்த 20 மாணவர்கள் உடல் நசுங்கி இறந்தனர். ஆசிரியர்களில் சிலரும் பலியானார்கள்.

இந்தச் சம்பவம் சீனாவில் ஷான்சி மாநிலத்தில் பக்சியான் மாவட்டத்தில் ஒரு கிராமத்தில் நடந்தது.

வீட்டில் குண்டுகள், வெடிமருந்துகளை வைத்து இருப்பது சட்டவிரோதமானது என்ற போதிலும் நிலக்கரிச் சுரங்க உரிமையாளர்கள் வெடிகுண்டுகளை வீடுகளில் பதுக்குவதை வாடிக்கையாகக் கொண்டுள்ளனர்.



பிலிப்பைன்சின் ஜோலே தீவில் அபுசெயாப் தீவிரவாதிகள் ஊடுருவியதை அடுத்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடும் பிலிப்பைன்ஸ் படையினர்.

# லூயி பாஸ்டர்


லூயி பாஸ்டர் 1822 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27 ஆம் திகதி பிரான்சில் பிறந்தார். அவரின் தந்தையார் தோல்பதனிடும் தொழிற்சாலையொன்றை நடாத்தி வந்ததால் அவருக்கு சிறு வயதிலேயே இரசாயனப் பொருட்கள் பற்றிய ஆர்வம் ஏற்பட்டது.

லூயி பாஸ்டர் 1847 ஆம் ஆண்டில் பௌதிகவியல் மற்றும் இரசாயனவியலில் பாரிஸில் டாக்டர் பட்டம் பெற்றார். அத்துடன் இவர் நுண்ணுயிரியல் துறையிலும் சிறந்து விளங்கினார்.

நோய்க்காரணிகள் பற்றிய கொள்கையை நிரூபித்தமை, பாய்ச்சர் முறைமையை கண்டு பிடித்தமை, அநேக நோய்களுக்கானநிர்ப்பீடனங்களை அபிவிருத்தி செய்தமை உட்படப் பல்வேறு கண்டுபிடிப்புக்களை மேற்கொண்ட பெருமைக்குரியவராக லூயி பாஸ்டர் திகழ்ந்தார்.

இன்று விற்பனைச் சாலைகளில் நாம் தூய்மைப் படுத்தப்பட்ட பாலைப் பெறுவதற்கு வழிவகுத்துத் தந்தவர் லூயி பாஸ்டர். அவர் கண்டு பிடித்த பாய்ச்சர் முறைமையைப் பயன்படுத்தியே பாலிலுள்ள பக்ரீரியாக்கள் அகற்றப்பட்டு பால் தூய்மைப் படுத்தப்படுகிறது.

ஆராய்ச்சிகளிலும், கற்பித்தலிலும் காலத்தைக் கழித்த லூயி பாஸ்டர் 1854 ஆம் ஆண்டில் லில்லே பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் பீடாதிபதியாகவும், இரசாயனவியல் பேராசிரியராகவும் தன்னை இணைத்துக் கொண்டார்.



இச் சமயத்தில் திராட்சை இரசத்திலிருந்து தயாரிக்கப்படும் "வைன்" குறுகிய காலத்தில் அதன் மணத்தை இழந்து பழுதடைந்து விடுவது பிரான்ஸின் பொருளாதார பிரச்சினைகளிலொன்றாக இருந்தது.

திராட்சைப் பழச்சாறு வைனாக மாறுவது ஒரு இயற்கை நிகழ்ச்சி ஆனால் அந்த வைனில் மதுவக் கலங்களும், பக்ரீரியாக்களும் இருப்பதை அது வரையிலிருந்த ஆராய்ச்சியாளர்கள் தெரிந்து கொள்ளாத நிலையிலிருந்தார்கள்.

வைன் அதனுடைய தனித்தன்மையான சுவையையும், மணத்தையும் இழப்பதற்கு காரணம் அதிலுள்ள பக்ரீரியாக்களே என்ற உண்மையைக் கண்டறிந்த லூயி பாஸ்டர் பக்ரீரியாக்களை நீக்கிச் சிறந்த மதுவ வகையைச் சேர்த்து தரமான "வைனை" தயாரிக்கும் முறையைக் கண்டு பிடித்து உலகிற்கு அறிவித்தார்.


லூயி பாஸ்டர் தன் இறுதிக் காலம் வரை கொலரா, டிப்தேரியா, சின்னம்மை உட்பட பல்வேறு நோய்களுக்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றை தடுப்பது பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொண்டார். இவரால் பல்வேறு நோய்களுக்கான நிர்ப்பீடனங்கள் கண்டறியப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டன.

நோய்களுக்கு பிரத்தியேக சிகிச்சையளிக்கும் வகையில் லூயி பாஸ்டர் "இன்ஸ்ரி ரியூட் பாஸ்டர்" என்ற விசேட நிறுவனத்தை ஸ்தாபித்தார். 1895 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதி இறக்கும் வரை பாஸ்டர் அந் நிலையத்தினை வழிநடத்தி வந்தார்.

# 7 ஆண்டுகளின் பின் வாய் வழியாக உணவு

இங்கிலாந்தில் வார்ன்டன் என்ற இடத்தைச் சேர்ந்த சிறுமி டில்லி மெர்ரல் (வயது 7) பிறந்தது தொடக்கம் 7 ஆண்டுகள் திரவ உணவை மட்டுமே வயிற்றில் இணைத்த குழாய் மூலம் சாப்பிட்டு வந்தாள். வாயில் திட உணவை விழுங்க முடியாத பல்பர் பால்சி நோய் சிறுமிக்கு வந்தது. இவளது சிகிச்சைக்காக பலரும் நிதி உதவி அளித்து உதவினர். அதன்படி அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலம் ஸ்டான் போர்டில் உள்ள குழந்தைகள் மருத்துவமனையில் சிறுமிக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. 7 ஆண்டுகளுக்குப் பிறகு முதன் முதலாக இப்போது வாய் வழியாக திட உணவு சாப்பிட தொடங்கி உள்ளாள் சிறுமி. உடல்நிலை சீராக உள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

# கைத்தொலைபேசி மூலம் இயங்கும் "ரோபோ"



உலகில் முதன் முறையாக கைத்தொலைபேசி மூலம் இயங்கும் அதிநவீன ரோபோவை ஜப்பானைச் சேர்ந்த ஒரு நிறுவனம் வடிவமைத்துள்ளது. இவ் ரோபோ மனிதனைப் போன்று நடத்தல், துள்ளுதல், குதித்தல் போன்ற செயல்களையும் செய்கின்றது.

# சுவிற்சர்லாந்தில் அதிநவீன வசதியுடன் கார் அறிமுகம்

சுவிற்சர்லாந்தில் இடம்பெற்ற சர்வதேச கார்க் கண்காட்சியில் அதிநவீன கார்கள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன.

சுவிற்சர்லாந்தில் ஒருவர் வடிவமைத்துள்ள பிரின்ஸ்பீட் டென்சோ என்ற காரில் பல சிறப்பம்சங்கள் இடம்பெற்றுள்ளன. காரில் பொருத்தப்பட்டுள்ள கமரா மற்றும் கருவிகள் ஓட்டுநரின் உடல்நிலையை உணர்ந்து அதற்கேற்ப தனது நிறத்தை மாற்றுவதுடன் செயற்படும் திறனும் உடையது. குறிப்பாக சாரதிக்கு நித்திரை வந்தால் அதனை உணர்ந்து பச்சை நிறத்திலிருந்து ஒறேஞ் நிறமாக கார் மாறி விடுவதுடன் ஒரு வகையான புளிப்பு மணத்தையும் வெளிப்படுத்தி பாதுகாப்பான பயணத்திற்கு உதவுகின்றது. பெற்றோல் மற்றும் எரிவாயுவில் இயங்கும் இக்கார் சுற்றுச்சூழலையும் பாதிக்காது என்பதுடன் 250 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லக் கூடியதெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் சாரதி விரும்பும் இடத்தில் அமர்ந்தபடி காரை இயக்கும் வகையிலும் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் பிரேக், அக்சிலேட்டர் என்பவற்றைக் கைகளாலேயே இயக்கக் கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

# 4200 வருடங்களுக்கு முற்பட்ட கல்லறை கண்டுபிடிப்பு



அவுஸ்திரேலிய புதைபொருள் ஆராய்ச்சியாளர் 4200 வருடங்களுக்கு மேற்பட்ட கல்லறையொன்றை கண்டுபிடித்துள்ளனர். இது முக்கியத்துவம் பெறுவதற்கு காரணம் அக்காலத்தில் வாழ்ந்த அரசனான பெப்பிட என்பவரின் ஆசானாகக் கடமையாற்றிய ஒருவருடைய கல்லறை என்பதாகும்.


இது அவரின் தந்தையான டெட்டி என்பவரின் கல்லறைக்கு வடக்கில் அமைந்துள்ளது.

இந்தக் கல்லறைகள் எகிப்தின் தலைநகர் கெய்ரோவுக்கு அண்மையில் காணப்படுகின்றன.

இந்தக் கல்லறைக்குரியவரின் பெயர் மெரி எனக்கூறப்படுவதாகவும் அதன் வாயிலில் இவரது மனைவியினதும், இவரினதும் உருவங்கள் பொறிக்கப்பட்டிருப்பதாகவும் ஆய்வாளர் ஹவாஸ் தெரிவிக்கிறார். இவர்கள் வெளிநாட்டைச் சேர்ந்தவர்களின் மேற்பார்வையாளர்களாக இருக்கலாமென்றும், இவர்களது படகு மூழ்கியபோது நீரில் அமிழ்ந்திருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# பேஸ்மேக்கர் கருவி மூலம் மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்த முடியும்

கடுமையான மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு மூளையில் சிறிய பேஸ்மேக்கர் கருவி பொருத்தி சிகிச்சை அளித்தால் மிகச் சிறந்த பலன் கிடைக்குமென்று மருத்துவ வல்லுனர்கள் கூறியுள்ளனர். மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்த எந்த சிகிச்சை முறையும் பயன் தராத பட்சத்தில் இந்த சிகிச்சை பொருத்தமானதாக இருக்கும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.



மூளையில் மன அழுத்தத்தைத் தூண்டி விடுவதாகக் கருதப்படும் குறிப்பிட்ட பகுதியில் இந்த நுட்பமான மின்னணுச் சாதனம் பொருத்தப்படுகிறது. பின்னர் இதில் இருந்து வெளிப்படும் மின் அலைகளைக்கொண்டு நோயாளிகள் மன அழுத்தம் மற்றும் கவலையால் பாதிக்கப்படுவது தடுக்கப்படுகிறது. இந்தச் சிகிச்சை முறை பல ஆண்டுகளுக்கு முன்பே நடைமுறைக்கு வந்து விட்டாலும், ஆழ்ந்த மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும் சிகிச்சையில் இப்போது தான் முதன்முறையாக ஈடுபடுத்தப் படுகிறது.

பார்க்கின்சன் எனப்படும் நடுக்க வியாதியை குணப்படுத்துவதிலும் இந்த பேஸ்மேக்கர் கருவிகள் கை கொடுக்கிறதாம். உடலின் தசைப் பகுதிகள் இயக்கத்துக்குப் பொறுப்பான மூளைப்பகுதியில் சில செல்கள் அழிந்துவிட்டாலோ, அல்லது செயல்திறன் குறைந்துபோனாலோ, குறிப்பிட்ட தசைப்பகுதிகளைக் கட்டுப்படுத்த முடியாமல் போகிறது. இதுமாதிரி நேரத்தில் உதடு,கை, கால்கள், கண்இமைகள் இஸ்டத்துக்கு நடுங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

– பசியேற்படுவதற்குக் காரணம்–

# மூளையில் ஏற்படும் உறுத்தலா அல்லது வயிற்றில் ஏற்படும் இரசாயனமாற்றமா

பசி ஏற்படுவதற்கு மூளையில் ஏற்படும் உறுத்தலா? அல்லது வயிற்றில் ஏற்படும் இரசாயன மாற்றமா? காரணம் இதன்போதா பசி காதை அடைக்கின்றது என்று கூறுகின்றனர். அவ்வாறெனில் வயிற்றுக்கும், காதிற்கும் தொடர்பு உண்டா என நோக்கின்

வயிற்றில் ஏற்படும் மாற்றத்தை அறிந்த பின்புதான் மூளை மற்றைய அவயவங்களுக்கு செய்தியினை அனுப்பி விடுகிறது. இது இரத்தத்தில் உள்ள குளுக்கோசின் அளவையும் கவனிக்கின்றது. அதன் பிற்பாடு அனைத்து உறுப்புக்களும் தூண்டிவிடப்படுகின்றன. இதன்போது உமிழ்நீர் சுரக்கும், மூக்கு உணவின் வாசனையை நுகர்ந்துகொள்கிறது. வயிற்றில் உள்ள அனைத்துச் சுரப்பிகளும் தொழிற்பட ஆரம்பிக்கிறது. எனவே வயிற்றிற்கு உணவு கிடைத்த பின்பே செவிக்கு உணவு கவனிக்கப்படும். இதனால்தான் நாம் பசியுடன் இருக்கும்போது எத்தகைய அறிவியல்களை கேட்டாலும் அவை நினைவில் நிற்பதில்லை.

ooo

# ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்

## பகுதி-33

# முல்லையில் புலிகளின் மீட்புப்பணி தமிழர்களுக்கான படைக்கட்டுமான அவசியத்தை மீண்டும் உணர்த்தியது

அ.லோகீசன்

**சுனாமிப் பேரழிவில் சிக்கி சிதைந்துபோன முல்லைத்தீவில் உடனடியாக மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்ட விடுதலைப் புலிகளின் துரித செயற்பாடு தமிழ் மக்களின் படைப்பலத்தை உலகிற்கு உணர்த்தியிருந்ததென தெரிவித்துள்ள வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரத்தினம் அவர்கள் அரச உதவிகள் எவையும் கிடைக்கவில்லை. வெறும் கண்துடைப்பாகவே அரசின் செயற்பாடு அமைந்திருந்தது என்றார். அவரின் கருத்துப் பகிர்வின் தொடரை இங்கு தருகிறோம்.**



கடற் தாயின் கோர வெறிகண்டு ஓடியவர்களும் அதனுள் சிக்குண்டு உயிர் தப்பியவர்களுமாக பெருமளவான மக்கள் தமது உயிரைக் கையில் பிடித்தவாறு பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓடிக் கொண்டிருந்தனர். இவ்வாறு சென்று



கொண்டிருந்த மக்கள் தமக்குச் சொந்தமான உடமைகள் எதையும் எடுத்து வரவில்லை. வெறும் கையுடன் அரைகுறை ஆடைகளுடன் தான் பாதுகாப்பான பகுதிகளை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

இந்த மக்களுக்கான உடனடித் தேவைகளான உணவு, உடை,ஆதரவு, ஆறுதல் போன்ற அனைத்தையும் தாமதம் இன்றி வழங்கவேண்டிய நிலை உருவாகியிருந்தது.

பாதிக்கப்பட்டஇந்த மக்களுக்கான உடனடித்தேவைகளை தாமதமின்றி எவ்வளவு விரைவாக வழங்க முடியுமோ அவ்வளவு விரைவாக வழங்க வேண்டிய நிலை இருந்தது. தவறும் ஒவ்வொரு நிமிடமும் தப்பியிருக்கின்ற எங்கள் மக்களின் உள நலனை வெகுவாகப் பாதிப்படையச் செய்துவிடும் நிலை காணப்பட்டது.

இப்படியிருக்க ஒவ்வொரு கிராமங்களில் இருந்தும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக உணவுப் பொருட்கள், உடைகள் என்பன சேகரிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களுக்குக் கொண்டுவந்து வழங்கப்பட்டன.

இலங்கைத்தீவில் என்றுமே நிகழ்ந்திராத மனிதப் பேரவலத்தை சுனாமிப் பேரலைகள்தான் முதலில் ஏற்படுத்தியிருந்தது. இந்த அழிவில் இருந்து உயிர் தப்பிய மக்களுக்கும், அழிவடைந்த பகுதிகளில் உடனடியாக மேற்கொள்ள வேண்டிய வேலைகள் எதற்கும் அரசு எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. அந்த நேரத்தில் முல்லைத்தீவைப்பற்றியோ, அங்கிருந்த மக்களைப் பற்றியோ எதுவும் சிந்திக்காத நிலையில் தான் சிறிலங்கா அரசாங்கம் இருந்தது.

சுனாமி அலைகளின் தாக்கத்தினால் பெரும் பாதிப்பு ஏற்பட்டது முல்லைத்தீவில் தான் என்ற செய்தியை அறிந்த தமிழ் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வைக் கட்டியெழுப்புவதற்கு ஏற்றாற்போல தம்மால் இயன்ற உதவிகளை வழங்கி வந்தனர்.

இந்த இடத்தில் மலையகத்தில் வாழ்கின்ற தமிழ்மக்களை நாங்கள் நிச்சயம் பாராட்ட வேண்டும். அன்றாடம் தங்களின் வாழ்வைக்கொண்டு செல்வதற்காக உடலை வருத்தி நூற்றி ஐம்பது ரூபா சம்பளத்தைப் பெறுகின்ற அந்த மக்கள் தமது ஒரு நாள் உழைப்பை முழுமையாக வழங்கி பல லொறிகளில் உதவிப் பொருட்களை அனுப்பியிருந்தனர். அதேபோல முஸ்லிம் மக்களும், சில சிங்கள மக்களும் இணைந்து பெருமளவான உதவிப் பொருட்களை வழங்கி வந்தனர்.

சம்பவம் இடம்பெற்ற அடுத்த சில நிமிடங்களிலேயே தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் அணிஅணியாக முல்லை நகரில் குவிந்து மீட்பு நடவடிக் கைகளில் ஈடுபட்டுவிட்டார்கள். அவர்கள் தமது உயிரைக்கூட பொருட்டாக நினைக்காது ஆபத்து நிறைந்த பகுதிகளிற்கெல்லாம் போய் தவித்துக்கொண்டிருந்த மக்களைக் காப்பாற்றிக் கொண்டிருந்தார்கள்.

அதேபோல மருத்துவப் பிரிவுப் போராளிகள் மருத்துவப் பொருட்களுடன் சம்பவ இடத்துக்கே வந்து சிகிச்சை அளித்துக் கொண்டிருந்தார்கள்.



பாதிக்கப்பட்டுத் தவித்துக்கொண்டிருந்த மக்களுக்கு என்ன வேண்டுமோ அதை எல்லாம் போராளிகள் வழங்கிக் கொண்டிருந்தார்கள். முல்லைக் கடற்கரையில் மீட்பு நடவடிக்கை முதல் நலன்புரி நிலையங்களில் ஆறுதல் கூறுவது வரைக்கும் போராளிகள் குவிந்து நின்றார்கள்.

இந்தவிடயம் தமிழ்மக்களுக்கான படைக்கட்டமைப்பின் அவசியத்தை மீண்டும் எங்களுக்கு புரியவைத்தது சம்பவ இடத்தில் மீட்பு நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்தியதோடு தானும் செயலில் இறங்கி காயப்பட்டவர்களையும் தப்பி இருந்தவர்களையும் மீட்கின்ற நடவடிக்கையில் கடற்படை சிறப்புத்தளபதி கேணல் சூசை அண்ணாவும் மேற்கொண்டிருந்தார்.

இதேபோலத்தான் போராளிகளுடன் மக்களும் இணைந்து வேலைகளைப் பொறுப்பேற்று செய்து கொண்டிருந்தனர்.

அரசின் உதவிகளை எதிர்பார்த்துக் காத்திருந்திருந்தால் இறந்தவர்களின் சடலங்களை இப்போதும் தேடிக்கொண்டு தான் இருந்திருப்போம்.

அரசாங்கம் பாதிக்கப்பட்ட மக்களிற்கான உதவிகளைச் செய்வதில் பாரபட்சம் காட்டி வருகிறது. பெரும் பாதிப்பிற்குள்ளான முல்லைத்தீவைத் திரும்பிக் கூட பார்க்க வில்லை. மக்கள் இப்போதும் வேதனையில் துடித்துக் கொண்டிருக் கிறார்கள். தென்பகுதி மக்களுக்கு வேண்டிய மறுசீரமைப்பு வேலைகளெல்லாம் துரிதமாக நடைபெறுகிறது. அந்தப்பகுதி மக்களிற்கு உதவுவதற்கு நான்முந்தி நீமுந்தி என்று முண்டி அடித்து உதவிவருகிற அரசு, ஏன் எங்கள் பகுதிகளுக்கு மட்டும் தடைகளையும் கெடுபிடிகளையும் மேற் கொண்டு வருகிறது. இந்தமக்களின் துயரம், வேதனை, அவர்களின் இழப்புக்கள் எதையும் அவர்கள் விளங்கிக் கொள்ள மறுக்கின்றார்கள். இங்கு பாதிக்கப்பட்ட மக்களும் மனிதர்கள்தான் என்பது அவர்களுக்குத் தெரியவில்லையா?

இந்தநிலை முல்லைத்தீவுக்கு மட்டுமில்லை வடக்கு-கிழக்கு தமிழ்மக்கள் அனைவருக்கும் இந்தநிலை தான் தொடர்கிறது.

பெரும் துன்பத்தில் தவித்துக் கொண்டிருக்கின்ற முல்லைத்தீவு மக்களுக்குச் சிறிய சிறிய உதவிகளை மாத்திரம் வழங்கிவிட்டு இந்தமக்களிற்கான சகல உத விகளையும் வழங்குகின்றோம் என்று பொய் கூறுவது மிகவும் வேதனையான ஒன்று.

நான் பாராளுமன்ற உறுப்பினராக வந்ததன் பின்னர் முல்லைத்தீவில் பெருமளவான கட்டடங்களைத்திறந்து வைத்தேன். அதைவிட இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஒரு பாடசாலையைக்கூட நான் திறந்து வைத்திருந்தேன். இப்போது அந்தக்கட்டடங்கள் எதையுமே காண வில்லை. முல்லைத்தீவைப் படிப்படியாக கட்டியெழுப்புவோம் என்ற நம்பிக்கையில் தான் நாங்கள் வேலைகளைச் செய்து வந்தோம். அதேபோலத்தான் மக்களும் கடலுடன் போராடி அல்லும்பகலும் சலிப்பின்றி உழைத்து கட்டடங்களைக்கட்டி அழகிய நகரமாக உருவாக்கிக் கொண்டிருந்தார்கள். அதையெல்லாம் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தோம்.

எங்களின் மகிழ்ச்சியை எல்லாம் ஒரு சில நிமிடங்களில் உடைத்தெறிந்து பல்லாயிரம் மக்களின் உயிரையும் குடித்து பாலைவனம் போல மாற்றிவிட்டாள் கடல்தாய்.

பொருளாதார ரீதியாக முன்னேற்றம் கண்டுவந்த இந்த மக்கள் இன்று உப்புச்சிரட்டை கூட இல்லாத நிலையில் தவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

அடுத்த கட்டமாக என்ன செய்வது என்று முடிவெடுக்க முடியாது துன்பத்தின் உச்சியில் நின்று தவித்துக் கொண்டிருக்கிறார்கள் எங்கள் மக்கள். எங்கள் உறவுகள் அவர்களின் துயரத்தை பகிர்ந்து கொண்டு மறுவாழ்வுக்கான பணிகளில் நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அவ்வாறு செய்வதன் ஊடாக ஓரளவுக்காவது அந்த மக்களின் துயரத்தை ஆற்ற முடியும்.

யாரால் என்ன செய்தாலும் இந்த மக்களிற்கான முழுமையான ஆறுதலை வழங்க முடியாது. அந்தளவுக்கு அவர்களின் இழப்புக்கள் மோசமாக இருக்கிறது என்றார் பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரத்தினம் அவர்கள்.

அமைதியாகக் அடித்துக் கொண்டிருந்த எங்கள் கடல், அகோரமாய் எழுந்து சுனாமியாய் அடித்த வேளை அதனுள் சிக்கி மோசமான பாதிப்பிற்குள்ளாகித் துடித்துக் கொண்டிருந்த மக்களுக்கான உடனடி மருத்துவ சிகிச்சைகளை சம்பவ இடத்திற்குச் சென்று மேற்கொண்டு நூற்றுக்கும் அதிகமானவர்களின் உயிரைக் காப்பாற்றிய தமிழீழ விடுதலைப்புலிகளின் மருத்துவப் பிரிவின் போராளி மருத்துவர் அந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பணிகள் பற்றியும், அதன் போது எதிர்கொண்ட சவால்கள் பற்றியும் பகிர்ந்து கொண்டார். அவர் பகிர்ந்தவை அடுத்த பகுதியில்

**தொடரும்**

## united Nations World Food Programme
## Sri Lanka
# VACANCY ANNOUNCEMENT

VA Number :-2005-6

**Deadline for application : 11March 2005**

**World food programme (WFP), the food aid organization of the United Nations is seeking applications from the qualified sri Lankan national candidates to fill the Radio Operator position for the WFP sub-office in Mullaithivu.**

**The Terms of Reference of the position is attached. Recruitment Will be Made as per UN rules and procedures. Selected candidates will be given an initial 3 months contract based on the emergency operational needs. Extension of contract will be made based on performance of the staff member and the requirement of the post.**

**Remuneraion willbe based on the UN Local Salary structure for the UN staff in Sri Lanka.**

**APPlicatons along With a detailed CV should be addressed to the Head of Office, World Food programme, No.142,Kandy Road, kilinochchi (Te:021-2285736,Fax:021-2285736). The deadline for submission of application is 11March 2005.**

**Women candidates are encouraged to apply. Equally qualified female candidates will be given preference Only short-listed candidates will be contacted.**

WFP is the world's Largest humanitarion agency. In 2003, WFP fed nerly 110 million people in 82 countries including most of the world's refugees and internally displaced people.
WFP has been providing food assistance to the Government of Sri Lanka since 1968 . WFP has started a large scale food- assistance programme for 750,000. Tsunami Victims in Sri Lanka during next 3-6 months.

(5765)

# கேள்வி அறிவித்தல்

இடிபாடுகள் அகற்றும் வேலைத்திட்டத்தின் கீழ் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பின்வரும் அவசர வேலைகள் செய்வது தொடர்பான கேள்விகள் கேள்விச்சபைத் தலைவரும், அரசாங்க அதிபர் மாவட்டச் செயலாளருமான என்னால் 03. 02. 2005 தொடக்கம் 11. 03. 2005 ஆம் திகதி பி. ப 3. 30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். அதே தினம் பி. ப 4. 00 மணிக்குக் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்

| வேலையின் பெயர் | இக்ராட் தரம் | கேள்வி வைப்புப்பணம் | கேள்விப்பத்திரப் பணம் |
|---|---|---|---|
| ஆழிப்பேரலை யினால் ஏற்பட்ட இடிபாடுகள் அகற்றி மட்டப்படுத்தல்.<br>(a) மருதங்கேணி உ. அ. அ. பிரிவு போக்கறுப்பு கி. சேJ/434 மருதங்கேணி உ. அ. அ. பிரிவு<br>(b) வெற்றிலைக்கேணி கி. சே. J/432<br>(c) சுண்டிக்குளம் கி. சே. J/435<br>(d) மருதங்கேணி கி. சே. J/428<br>(e) செம்பியன்பற்று கி. சே. J/426<br>(f) வத்திராயன் கி. சே. J/429<br>(g) ஆழியவளை கி. சே. J/431<br>(h) உடுத்துறை கி. சே. J/430<br>(i) முள்ளியான் கி. சே. J/433 | M-4 | ரூ.280.000/= | ரூபா 3000/= |

01. மேற்படி வேலைகளுக்கமைவாக கேள்விப்பத்திரப் பணத்தை தங்களுக்கு வசதியான அங்கீகரிக்கப்பட்ட வங்கியிலிட்டு அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம் என்ற பெயரில் வங்கிக்கட்டளையைப் பெற்று(Pay Order) அரசாங்க அதிபரின் காரியாலயமாகிய மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் சமர்ப்பித்து 04.03.2005 ஆம்திகதி தொடக்கம் 10.03.2005 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிவரை கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

02. மேற்படி வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு மூலப்பிரதியையும் இணைப்பிரதியையும் தனித்தனி கடித உறைகளில் இடப்பட்டு உறைகளின் இடதுபக்க மேற்பக்கத்தில் வேலையின் விபரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியாக உறைகளில் இடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் இரண்டையும் பிறிதொரு உறையில் இட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தக்காரரே முத்திரையிட்டு அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம் என்ற முகவரியிட்டு மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் 11.03.2005 ஆம் திகதி பி.ப 3.30 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட காலநேரத்திற்குப் பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக்காரணம் கொண்டும்ஏற்றுக கொள்ளப் படமாட்டாது.

03. கேள்விச்சபையால் தெரிவு செய்யப்படும் ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்ட திகதியிலிருந்து இரண்டு வேலை நாட்களுக்குள் கேள்விச் சபைத்தலைவருடன் வேலைக்கான ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திட்டு உரிய காலத்தில் வேலையைப் பூர்த்தி செய்து கையளித்தல் வேண்டும். எவ்வித காலதாமதமும் ஏற்றுக்கொள் ளப்படமாட்டாது.

04. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணை யாளரின் இல:29 செட்டித்தெரு,யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் அமைந்துள்ள அலுவலகத்தில் பார்வையிடுவதுடன் இந்தவேலைகள் தொடர்பான மேலதிக விபரங்களைக் குறிப்பிட்ட காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாமென அறியத் தருகின்றேன்.

க.கணேஸ்
அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளரும்
கேள்விச்சபைத் தலைவரும்,
யாழ்ப்பாணம்.

மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

(சி-11377)

# நாம் அதிகாரத்திலிருந்து விலக முன் தேர்தல் முறையை மாற்றுவோம்

-அநுரா பண்டார நாயக்க

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையை மாற்றவேண்டும், இதற்காகத் தற்போதுள்ள அரசியல் யாப்பை மாற்றவேண்டும் அத்தோடு நாங்கள் அதிகாரத்திலிருந்து விலக முன் இந்த தேர்தல்முறையையும் மாற்றுவோம் என உல்லாசப்பயண மாற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் அநுரபண்டாரநாயக்க கூறியுள்ளார்.

வெயாங்கொடை பண்டாரநாயக்க மத்திய மகாவித்தியாலயத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற பரிசளிப்புவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அநுரா இவ்வாறு கூறினார்.

தற்போதுள்ள தேர்தல் முறையை மாற்றியமைத்து தொகுதிவாரியான தேர்தல் முறையை மீண்டும் ஏற்படுத்த வேண்டுமெனக்கூறிய அவர், பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசியல் யாப்பை மாற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வி அடைந்ததாகவும் அவர் மேலும் கூறினார்.

தற்போதுள்ள தேர்தல் முறைமூலம் யார் தங்களுக்கு வாக்களித்தார்கள் என்பதை இனங்காண முடியாது. இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு மக்களினுடைய பிரச்சினையை தீர்ப்பதற்கு தன்னுடைய மக்களை தற்போதுள்ள முறையின் கீழ் இனங்காண முடியாது. இதனை மாற்ற வேண்டுமென எனது தாயார் 1978 இல் முதலில் உறுதி அளித்தார். பின்னர் என்னுடைய சகோதரி உறுதிஅளித்தார் ஆனால் அவராலும் இயலாமல் போனது.

எனினும் நாங்கள் அதிகாரத்தில் இருந்து விலகுவதற்கு முன்னர் இந்தத்தேர்தல் முறையை மாற்றிவிட்டே செல்லுவோம் என்றார் அநுரா.

# மலேசியாவிலிருந்து வந்த நிவாரணப்பொருள் மாயம்

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென மலேசியாவிலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட நிவாரணப்பொருட்களில் அரைவாசித்தொகுதியைக் காணவில்லை என்று அமெரிக்காவைச் சேர்ந்த தொண்டு அமைப்பு முறைப்பாடு செய்துள்ளது.

கடந்த சனவரி 17 ஆம் திகதி கொண்டுவரப்பட்ட இந்த நிவாரணப்பொருட்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைக்கப்பட்டதாகவும், அவற்றில் சுமார் 58 வீதமான பொருட்களை காணவில்லை என்றும் அந்தத் தொண்டு அமைப்பு சிறிலங்காவின் நலன்புரி அமைச்சிடம் முறையிட்டுள்ளது.

# - எஸ்.பி. திஸாநாயக்க -
# வழக்கு விசாரணையில் இருந்து நீதிபதி ஒருவர் விலகினார்

முன்னாள் அமைச்சர் எஸ். பி திஸாநாயக்கவின் வழக்கு விசாரணையில் இருந்து மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ஒருவர் விலகியுள்ளார்.

கே. ஸ்ரீபவனே இவ்வாறு விலகிக் கொண்ட நீதிபதியாவார். தமது பாராளுமன்ற அங்கத்துவத்தினை இழக்கச் செய்வதற்கு எதிராக எஸ். பி திஸாநாயக்கவினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் விசாரணையில் இருந்தே நீதிபதி ஸ்ரீபவன் விலகியுள்ளார். நேற்று முன்தினம் இது தொடர்பில் மன்றில் கருத்துரைத்த அவர், தொடர்ந்து இந்த வழக்கு விசாரணையில் பங்கேற்கப்போவதில்லை என அறிவித்தார்.

இந்த வழக்குக் காரணமாக தமக்கு நேர்ந்துள்ள பல விரும்பத்தகாத சம்பவங்களாலேயே தாம் இந்த முடிவை எடுக்கவேண்டியேற்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

## நிர்மாணிப்புப்பணி இந். நிறுவனத்திடம்

நுரைச்சோலை அனல் மின் உற் பத்தி நிலையத்தினைத் நிர்மாணிக்கும் பணி இந்திய நிறுவன மொன்றிடம் ஒப்படைக்கப் பட வுள்ளது.

இதற்கான ஒப்புதலை அமைச் சவை கடந்த புதன்கிழமை வழங்கி யுள்ளது.

கடந்த புதன்கிழமை கூடிய அமைச்சரவை நுரைச்சோலை அனல்மின் உற்பத்தி நிலையத் தினை நிர்மாணிக்கும் பணிகளைத் துரிதப்படுத்தும் வகையில் இந் தத்தீர்மானத்தை எடுத்ததாகத் தெரிவித்துள்ளது.

# அதிக புகை கக்கும் வாகனங்களை தடைசெய்ய சட்டம் வருகிறது

2006 ஆம் ஆண்டில் இருந்து அதிக புகையை வெளியேற்றும் வாகனங்களை தடைசெய்யப்போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சுற்றாடல்துறை அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி இது தொடர்பாக கூறுகையில், இலங்கையில் அதிகமானோர் புற்றுநோயினால் மரணமாகின்றனர். இவர்களில் பெரும்பாலானோருக்கு வாகனங்களில் இருந்து வெளியாக்கப்படும் புகையே புற்று நோய்க்கு காரணமாக அமைகிறது. எனவே அதனை தடுக்கும் முகமாக அமைச்சர வையில் பிரேரணை ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளேன். அதனடிப்படையில் எதிர்வரும் 2006 ஆம் ஆண்டு தை மாதம் முதல் வீதியில் பயணிக்கும் வாகனங்கள் புகை வெளியிடவில்லை என்பதற்கு சான்றிதழை பெற்றிருக்க வேண்டுமென்பது சட்டமாக்கப்படவுள்ளது.என்றார்.

# பாதிக்கப்பட்ட 50 வீதமானோருக்கு இதுவரை நிவாரணமில்லை
## - அமைச்சர் அத்தாவுடசெனவிரத்ன

(மட்டக்களப்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்டு அகதிமுகாம்களில் வாழும் 50 வீதமானோருக்கு இதுவரைஅரசாங்கத்தின் நிவாரண உதவிகள் கிடைக்கவில்லையென நிவாரணப் பணிக்குழுவின் மட்டக்களப்பு மாவட்ட தலைவரும் அமைச்சரு மான அத்தாவுடசெனவிரத்ன தெரிவித்துள்ளார்.

அண்மையில் அங்கு விஜயம் மேற்கொண்டு ஆய்வு நடத்திய போது இத்தகவல் பெறப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். எனினும் இது தொடர்பாக விசாரணை நடத்தி துரிதகதியில் அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதாகவும் 300 மீற்றருக்கு அப்பால் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படுமென்றும் அவர் கூறினார்.

# ஜார்க்கண்டில் சிபுசோரன் பதவியேற்பு எதிர்க்கட்சிகள் பலத்த கண்டனம்

ஆட்சியமைக்க சிபுசோரனை அழைத்ததால் எழுந்த சர்ச்சை குறித்து விசாரிப்பதற்காக ஜார்க்கண்ட் மாநில ஆளுனர் சையது சிப்தே ராசிக்கு சனாதிபதி அப்துல்கலாம் அவசர அழைப்பு விடுத்துள்ளார். இதற்கிடையே, பாரதிய ஜனதா கூட்டணிக்கு இருக்கும். பெரும்பான்மையை நிரூபிப்பதற்காக அந்த அணியைச் சேர்ந்த 41 உறுப்பினர்கள் நேற்று முன்தினம் சனாதிபதி முன்பு அணிவகுப்பு நடத்தினார்கள்.

81 உறுப்பினர்களைக் கொண்ட ஜாரக்கண்ட் மாநில சட்டசபைத் தேர்தலில் எந்தக் கூட்டணிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. பாரதிய ஜனதா கூட்டணி 36 இடங்களையும் (பா.ஜனதா-30,ஐக்கிய ஜனதா தளம்-06) ஐக்கிய முற்போக்குக் கூட்டணி 26 இடங்களையும் (ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா-17, காங்கிரஸ்-09)கைப்பற்றின.

பாரதிய ஜனதா கூட்டணி தலைவர்கள் ஆளுனர் சையது சிப்தே ராசியை சந்தித்து சுயேச்சைகள் உட்பட 41 உறுப்பினர்களின் பட்டியலைக்கொடுத்து ஆட்சியமைக்க உரிமை கோரிய நிலையில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவர்களும் தங்கள் அணியின் பட்டியலைக் கொடுத்து தங்களுக்கு 42 உறுப்பினர்கள் ஆதரவு இருப்பதாகக் கூறினார்கள்.

இப்படியொரு குழப்பமான சூழ்நிலை இருந்த நிலையில் ஆட்சியமைக்க வருமாறு ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா தலைவர் சிபு சோரனுக்கு ஆளுனர் சையது சிப்தே ராசி நேற்று முன்தினம் மாலை அவசர அழைப்பு விடுத்தார். அதை ஏற்று அவர் ஜார்க்கண்ட் மாநில முதலமைச்சராகப் பதவியேற்றார். அவருடன் ஐந்து அமைச்சர்களும் பதவியேற்றனர்.

ஜார்க்கண்ட் ஆளுனரின் இந்த நடவடிக்கை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அவர், சிபுசோரனை ஆட்சி அமைக்க அழைத்ததற்கு தேசிய ஜனநாயகக் கூட்டணி கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.



சிபுசோரனின் பதவியேற்பை எதிர்த்து எதிர்க்கட்சிகள் சனாதிப்தி அப்துல்கலாம் முன் அணிவகுத்து நின்ற காட்சி

## சிதம்பரத்திடம் மண்டியிடப்போவதில்லை

### முதல்வர் ஜெயலலிதா

தமிழகத்தில் கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு விவகாரத்தில் மத்திய அமைச்சர் ப.சிதம்பரத்திடம் மண்டியிடவேண்டிய அவசியமில்லையென தமிழக முதல்வர் ஜெயலலிதா தெரிவிக்கின்றார்.

சென்னை நகரில் குடிநீர்ப் பிரச்சினையை தீர்ப்பதற்காக கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்தை முன்மொழிந்த மன்மோகன்சிங் தலைமையிலான அரசாங்கம் ரூபா1000 கோடி மதிப்பிலான நிதி ஒதுக்கீட்டை 2004-2005 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கியிருந்தது. ஆனால் அந்நிதி ஒதுக்கீட்டை பயன்படுத்தி தமிழக அரசு திட்டத்தை நிறைவுசெய்யாததால் இவ்வாண்டு வரவுசெலவுத் திட்டத்தில் அத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கப்படவில்லையென மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் அறிவித்திருந்தார்.

சிதம்பரத்தின் கூற்றுக்குப் பதிலளித்துப் பேசியபோதே ஜெயலலிதா மேற்சொன்ன கூற்றை தெரிவித்திருந்தார் எனத் தெரிகிறது.

# பீகாரில் புதிய முதல்வர் யார்?

# இழுபறி நிலையில் கட்சிகள்

**இந்திய - மாநிலமான பீகார் சட்டசபைக்கான தேர்தல் நடைபெற்று முடிவுகள் வெளியாகி ஐந்து நாட்கள் கடந்துவிட்ட நிலையிலும் எந்தக்கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காததால் ஆட்சியமைப்பது யார்? எனும் குழப்பநிலை நீடிக்கிறது.**

இந்நிலையில் ஆட்சியமைப்பது தொடர்பாக ராஷ்டிரிய ஜனதாதள தலைவர் லல்லுப்பிரசாத் ஜாதவ் நேற்று முன்தினம் டில்லியில் காங்கிரஸ் தலைவி சோனியாவுடன் அரை மணிநேரம் முக்கிய கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.

இதுஇவ்வாறிருக்க தேசியவாத காங்கிரஸ் முன்னாள் தலைவரும் மத்திய அமைச்சருமாகிய சரத்பவார் லல்லுப் பிரசாத்தைச் சந்தித்து பேசிய போது தமது கட்சி உறுப்பினர்கள் மூவரதும் ஆதரவை வழங்குவதாக தெரிவித்திருக்கிறார்.

இது தவிர பகுஜன் சமாஜ் கட்சி தமது இரு உறுப்பினர்களையும் மார்க்சிய கம்யூனிஸ்ட் ஒரு உறுப்பினரையும் கொண்டு லல்லுப் பிரசாத் தலைமையிலான ராஷ்டிரிய ஜனதா தளத்திற்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ள நிலையில் மொத்தமாக 94 உறுப்பினர்களுடன் உள்ள லல்லு தலைமையிலான கூட்டுக் கட்சிகளிற்கு எதிர்த்தரப்பில் பாரதிய ஜனதாக் கட்சி 92 உறுப்பினர்களைக் கொண்ட பலத்துடன் உள்ளது.

29 உறுப்பினர்கள் கொண்ட லோக் ஜன சக்தி எந்தக்கட்சிக்கும் ஆதரவு வழங்கப் போவதில்லையென திட்டவட்டமாக அறிவித்திருக்கிறது.

காங்கிரஸ் அரசாங்கத்தின் மத்திய அமைச்சராக இருக்கிற ராம் விலாஸ் பஸ்வானின் கட்சிதான் லோக் ஜனசக்தி கட்சி என்பது குறிப்பிடத்தக்கது.

243 உறுப்பினர்கள் கொண்ட பீகார் மாநில சட்டசபைக்கு ஆட்சியமைப்பதற்கு 122 உறுப்பினர்கள் ஆதரவு வேண்டியிருக்கின்ற நிலையில் 17 உறுப்பினர்களைக் கொண்டதான சுயேட்சை கட்சிகளின் ஆதரவே இரு பெரும் கட்சிகளிற்கும் அவசியமாகியுள்ளது.

# சேது சமுத்திரத்திட்டத்தால் புதிய துறைமுகங்கள் உருவாகும்

**- டி.ஆர். பாலு**

சேது சமுத்திரத்திட்டம் நிறைவேற்றப்பட்டால்,அதன் கடலோரப் பகுதிகளில் தற்போதுள்ள துறைமுகங்கள் மேம்படுத்தப் படுவதுடன், புதிய துறைமுகங்களும் உருவாக்கப்படுமென்று இந்திய நெடுஞ்சாலை, கப்பல் மற்றும் சாலைப் போக்குவரத்துத்துறை அமைச்சர் டி.ஆர் பாலு. தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், சேது சமுத்திரத்திட்டத்திற்கு நிதி திரட்ட ஏற்கனவே , சேதுசமுத்திரம் கார்ப்பரேஷன் லிமிடெட் என்ற பெயரில் ஓர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாராக உள்ளது. சுற்றுச்சூழல் ஒப்புதல் இன்னும் கிடைக்கவில்லை. அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத் திட்டம்நிறைவேற்றப்பட்டால் இந்தியாவின் மேற்கு மற்றும் கிழக்குக் கடற்கரைப் பகுதிகளுக்கு குறுகிய நேரத்தில் கடல்மார்க்கமாகச் செல்ல முடியும். அதனால் கப்பல் போக்குவரத்து நிறுவனங்கள். ஏற்றுமதி மற்றும் இறக்குமதியாளர்கள், வர்த்தகர்கள் பெரும் பயனடைவார்கள். இந்தியாவின் வர்த்தகம் உலக அளவில் மேம்பாடு அடையும். மேலும் உள்நாட்டு கடல்வழி சரக்குப் போக்கு வரத்தும அதிகரிக்கும். இத் திட்டத்தை ஒட்டி அமைந்துள்ள கடற்கரைப் பகுதிகளில் தற்போதுள்ள துறைமுகங்கள் மேம்படுத்தப்படும் புதிய துறைமுகங்களும் உருவாக்கப்படும். அப்பகுதியில் ஒட்டுமொத்தத் தொழில் வளர்ச்சி ஏற்படுமென்று தெரிவித்துள்ளார்.

# ராஜஸ்தானில் தங்கம்

ராஜஸ்தானில் தங்கம் மற்றும் செம்புச் சுரங்கம் இருப்பதை புவியியல் ஆய்வாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். ராஜஸ்தான் மாநிலத்தில் புவியியல் ஆய்வாளர்கள் பல ஆண்டாகத் தீவிர ஆய்வு மேற்கொண்டுள்ளனர். அந்த ஆய்வில் பல அரிய கனிம வளங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. தற்போது தங்கம் மற்றும் செம்பு போன்ற தாதுப் பொருட்கள் ஏராளமாக இருப்பது தெரிய வந்துள்ளது.

இது குறித்து தொடர்ந்தும் அகழ்வாராய்ச்சிகள் நடைபெற்று வருவதாக துறைசார் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



காஷ்மீரில் பனிப்பொழிவால் சூழப்பட்டுக் கிடக்கும் கிராமம் ஒன்றின் வீதி

# ஒரு கோடி ரூபா கறுப்புப்பணம் பிடிபட்டது



சென்னையில் கத்தை கத்தையாகக் கைப்பற்றப்பட்ட கறுப்புப் பணத்தைப் படத்தில் காணலாம்

கடந்த புதன்கிழமை இந்தியாவிற்குள் சட்டவிரோதமான முறையில் கொண்டுவரப்பட்ட ஒரு கோடி இந்திய ரூபாய்கள் சென்னையில் பொலிசாரிடம் சிக்கியது.சென்னையை மையமாகக் கொண்டு நீண்ட காலமாக நடைபெற்று வரும் கடத்தலின் ஒரு அங்கமாகவே மேற்படி கறுப்புப் பணமும் உள்வந்ததாக தமிழகப் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

இந்தியாவைச் சேர்ந்த பலர் வெளிநாடுகளில் பணிபுரிந்து வருகின்றனர். அவர்கள் தமது உறவுகளுக்கு சட்டவிரோதமான முகவர்கள் மூலம் தமது நாட்டுக்கு பணத்தை அனுப்பி வைக்கின்றனர். இவ்வாறான பணப்புழக்கம் மத்திய அரசிற்குத் தெரியாமல் இடம்பெறுவது என்பது குறிப்பிடத்தக்கது.


## அறிவித்தல்

நவிண்டிலில் கரவெட்டியில் வசிக்கும் கந்தையா வேலாயுதபிள்ளை அமிர்தகௌரியாகிய நான் எனது கணவன் காலஞ்சென்ற கந்தையா வேலாயுபிள்ளைக்கு உரித்தும் சோந்தையும் ஆட்சியுமாயிருந்து தற்போது அவரின் ஏகபுத்திரியான பராயமற்ற வேலாயுதபிள்ளை பிரியங்காவுக்கு உரித்துச் சோர்தையுமாயுள்ளதுமான கிளிநொச்சியிலுள்ள "வெட்டுக்காடு" என்றழைக்கப்படும் எட்டு ஏக்கர் (ஏக்கர்08) கொண்ட நிலப்பாகத்தை எனது கணவரின் சில உறவினர்கள் தமது ஆதனமெனக் கூறி விற்க முற்படுவதாக நான் அறிகிறேன். குறித்த பராயமற்ற பிரியங்காவின் இயற்கைப் பாதுகாவலரும் தாயாருமாகிய நான் குறித்த சட்ட விரோதமான விற்பனையில் ஈடுபடும் எவரிடமுமிருந்தும் குறித்த ஆதனப் பாகத்தை அறுதியாக வாங்க வேண்டாமென இத்தால் சகலரையும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

வே. அமிர்தகௌரி
நவிண்டில்,
கரவெட்டி

04.03.2005 (5766)

## இந்தியாவுக்கு எதிரான 3ஆவது டெஸ்டில் விளையாடுவேன் - அக்தர் நம்பிக்கை



காயங்காரணமாக இந்திய அணியுடனான முதல் இரு டெஸ்ட் போட்டிகளிலும் பங்கு பற்ற முடியாது போன பாகிஸ்தான் அணி வேகப் பந்துவீச்சாளர் சொகைப் அக்தர் மூன்றாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியில் பங்கேற்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது அவரின் காயம் குணமடைந்து வருவதாகவும், இறுதிப்போட்டிக்கு முன்பு தனது உடற் தகுதியை நிரூபித்து மூன்றாவது போட்டியில் பங்கெடுப்பதாகவும் அக்தர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். உடற்பரிசோதனையை மேற்கொண்ட கிரிக்கெட் வைத்தியர் குழு இவரினதும் மேலும் இரு வீரர்களான சபீர் அகமது, உமர்-குல் ஆகியோரின் உடல் நிலையைப் பரிசோதித்து அண்மையில் அறிக்கை வெளியிட்டுள்ளது. சொகைப் அக்தர் அண்மையில் அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது பாலியல் முயற்சியில் ஈடுபட்டார் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட அடுத்த நாள் அணியில் இருந்து நீக்குவதாக அறிவிக்கப்பட்டார்.

இந்தியா போன்ற நாடுகளுக்குச் செல்லும் வாய்ப்பைத் தவறவிடுவது பெரும் ஏமாற்றமளிக்கும் என்றாலும், மூன்றாவது போட்டியில் தான் விளையாடும் நம்பிக்கையிருப்பதாக அக்தர் கூறியுள்ளார். இதற்கிடையில் அக்தர் வார்விக்சையர் கழகத்துக்காக ஆட வரும் ஜூலையில் செல்வதாகவும் பின்னர் செப்ரெம்பர் வரை பாகிஸ்தான் உள்ளூர் போட்டிகளில் ஆடுவார் என்றும் பாக்-கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.




## மூன்றாவது போட்டியிலும் தென்னாபிரிக்கா வெற்றி

சிம்பாப்வேக்கு எதிரான மூன்றாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியையும் தென்னாபிரிக்க வென்றுள்ளது. மூன்று போட்டிகளைக் கொண்ட தொடரில் இரண்டு போட்டிகளில் வென்ற தென்னாபிரிக்க தொடரை ஏற்கனவே கைப்பற்றியது.

கடந்த முதலாம் திகதி நடைபெற்ற மூன்றாவது போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி தென்னாபிரிக்க பந்துவீச்சாளர்களுக்கு முகம்கொடுக்க முடியாது 135 ஓட்டங்களில் ஐந்து வீரர்கள் ஆட்டம் இழந்தனர். எனினும் ஒருவருட கால இடைவெளிக்குப் பின்னர் அணிக்குத் திரும்பிய ஹித்ஸ்றீக் சிறப்பாக ஆடி 68 ஓட்டங்களைப் பெற அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 206 ஓட்டங்களைப் பெற்றது.

இப்போட்டியில் முன்னணி வீரர்கள் இன்றி 207 என்ற வெற்றி இலக்குடன் ஆடிய தென்னாபிரிக்கா முதலில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 79 ஓட்டங்களைப் பெற்றது. எனினும் அவ்வணியின் ஜஸ்ரின் கெம்ப் சிறப்பாக ஆடி 4 பவுண்டரிகள், 4 சிக்சர்கள் அடங்கலாக 79 ஓட்டங்களைப்பெற்றார். இதனால் அவ்வணி 46.3 ஓவர்களில் வெற்றி இலக்கை இழந்து ஐந்து விக்கெட்டுக்களால் வென்றது.

## டெஸ்ட் அணியில் மீண்டும் கெய்ன்ஸ்

வரும் 10 ஆம் திகதி ஆரம்பமாகும் அவுஸ்திரேலியாவுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் ஆட நியூசிலாந்து சகல துறை வீரர் கிளிஸ் கெய்ன்சுக்கு நியூசிலாந்து கிரிக்கெட் சபை அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அண்மையில் அவுஸ்திரேலியாவுடனான போட்டியின் போது அவர் பிரட்லீயின் பந்துவீச்சில் காயமடைந்தார். கெய்ன்ஸ் முன்னர் டெஸ்ட் அணியிலிருந்து நீக்கப்பட்டு ஒரு நாள் அணியில் இணைக்கப்பட்டார். சிறந்த சகல துறை வீரரான இவர் 62 டெஸ்ட் போட்டிகளில் ஆடிய அனுபவத்தைப் பெற்றுள்ளார். அங்கு போட்டிகளில் பங்கு பற்றி ஐந்து விக்கெட்டுக்களைப் பெற்றுள்ளார். நியூசிலாந்து அநேகமான வீரர்களை இந்தப் போட்டியில் இழந்துள்ளது. ஸ்கொட்ஸ்டைரிஸ், ஷேன்பொண்ட் ஜேக்கப் ஓரம், மைக்கல் மேஷன், கைல்மில்ஸ் மற்றும் அடம்ஸ் ஆகியோரும் காயம் காரணமாக அணியில் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## தென்னாபிரிக்கா சொமசெட் கழக அணியில் சனத்



சிறிலங்கா கிரிக்கெட் அணி வீரர் சனத் ஜெயசூரிய தென்னாபிரிக்காவின் சொமசெட் கழக அணிக்காக விளையாடவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வரும் ஏப்ரல் இறுதி முதல் மே இறுதி வரை நடைபெறும் உள்ளூர் போட்டிகளில் அவர் தென்னாபிரிக்க அணித் தலைவர் கிறேம் ஸ்மித்தின் இடத்திற்குப் பதிலாக சொமசெட் கழக அணிக்காக விளையாடுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், இங்கு நடைபெறும் நான்கு போட்டிகளிலும் பங்குபற்ற உள்ளதாகவும், இது சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்ற உதவியாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

இது பற்றி சிறிலங்கா கிரிக்கெட் சபை கருத்து ஒன்றும் தெரிவிக்கவில்லை. எனினும், சொமசெட் கழகம் இதனை உறுதிப்படுத்தியுள்ளது.

இதனைவிட மற்றும் சில வீரர்கள் இங்கிலாந்து கழகங்களுக்காக விளையாடவுள்ளனர். உப்புல் சந்தன குரெசஸ்ட சையர் அணியுடனும், சமிந்தவாஸ் வேஸ்ட்டர் சையர் அணியுடனும், முரளிதரன் லங்கா சையர் அணியுடனும் விளையாட ஒப்பந்தம் செய்துள்ளனர். இதனையடுத்து மகேல ஜெயவர்த்தன, குமார் சங்கக் கார ஆகியோர் இவ்வாய்ப்பை எதிர்பார்த்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இந்தியா வந்ததையொட்டி போபாலில் பள்ளிச் சிறுவர்கள் அந்த அணியை வாழ்த்தி மட்டையை உயர்த்திக் காட்டும் காட்சி.




## கேணல் கிட்டு நினைவு கால்பந்தாட்டம் கிளி.யில் நேற்று சிறப்புற ஆரம்பம்



கேணல் கிட்டு நினைவாக மாவட்ட ரீதியில் வெற்றிபெற்ற கழகங்கங்களுக்கிடையிலான கால்பந்தாட்ட சுற்றுப் போட்டி நேற்றுக் காலை 9.00 மணியளவில் கிளி. உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் வெகு சிறப்பாக ஆரம்பமாகியது.

தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை முல்லை மாவட்ட கால்பந்தாட்டச் சங்கத் தலைவர் சிவனடியார் ஏற்றிவைத்தார். தேசியக் கொடியினை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் ஏற்றி வைத்தார். இதனைத் தொடர்ந்து வங்கக் கடலில் காவியமான கேணல் கிட்டு மற்றும் மாவீரர்களின் உருவப்படங்களுக்கு தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி. பாப்பா ஈகச் சுடரினை ஏற்றி மலர்மாலை அணிவித்தார்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து ஆரம்ப உரையினை நிகழ்த்தி போட்டியினை கி. பாப்பா ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் யங்ஹென்றீஸ் அணிக்கும், முல்லை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் முள்ளியவளை வித்தியா அணிக்குமிடையிலான போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் பங்குபற்றிய வீரர்களை மூன்று மாவீரர்களின் தாயாரான திருமதி. கிறிஸ்ரீனம்மா பொன்.தியாகம் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

இப்போட்டியில் யாழ். அணி முல்லை அணியை 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. ரஜீவ் மூன்று கோல்களையும், சதீஸ்வரன் ஒரு கோலையும் போட்டனர்.

பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற்ற போட்டியில் கிளிநொச்சி அணி (வட்டக்கச்சி லக்கிஸ்ரார்), வ்வுனியா (மருதநிலா) அணியை 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஜெயந்தன் ஒரு கோலையும், தண்ட உதை சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சுதாகரனும் ஒரு கோலைப் போட்டனர்.

முன்னதாக இப்போட்டியில் கலந்து கொண்ட வீரர்கள் தமிழீழ திரைப்பட வெளியீட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் ராதா அவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

பிற்பகல் 4.00 மணியளவில் நடைபெற்ற போட்டியில் மன்னார் அணி (பனக்கட்டிக் கொட்டு சென்ஜோசப்) அணி மட்டக்களப்பு (அரசடித்தீவு விக்னேஸ்வரா) அணியை 10-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. றோ. வோ. சொய்ஸா மூன்று கோல்களையும், கீற்றர்ஸ் இரு கோல்களையும், கமிலஸ், டிக்கோனி, சுதர்சன், ஷியான், அமல்ராஜ் தலா ஒரு கோலையும் போட்டனர்.

முன்னதாக இப்போட்டியில் கலந்து கொண்ட வீரர்கள் மட்டு. அம்பாறை மாவட்ட தளபதி ராம் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

நேற்றைய போட்டிகளுக்கு நடுவர்களாக க. புவனேந்திரராசா, சிவலிங்கம், ப. சசிவர்ணன், யோ. ரஜனிகாந்த், வி. சாரங்கன், எஸ். கிறிஸ்ரி ஆகியோர் கடமையாற்றினர்.

இப்போட்டித் தொடரில் இன்று காலை 10.30 மணிக்கு மட்டு. கிளி அணிகளுக்கிடையிலான போட்டியும், பி.ப. 2.30 மணிக்கு முல்லை. - திருமலை (பிக்புட்ஸ்) அணிகளுக்கிடையிலான போட்டியும், 4.00 மணிக்கு வவுனியா, மன்னார் அணிகளுக்கிடையிலான போட்டியும் நடைபெறவுள்ளன. (ச)

## தமிழீழ தேசிய பெருவிளையாட்டு விழா ஒத்திவைக்க வேண்டியதாகியுள்ளது!



### விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா

தமிழீழ தேசிய பெருவிளையாட்டு விழாவை நாங்கள் இம்முறை ஒத்திவைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி. பாப்பா அவர்கள் குறிப்பிட்டுள்ளார். கேணல் கிட்டு வெற்றிக் கிண்ணத்திற்கான கால்பந்தாட்டப் போட்டியின் சிறப்பம்சம் தொடர்பாக கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். தொடர்ந்து எமது கேள்விகளுக்கு அவர் பதிலளிக்கையில்,

☐ கேணல் கிட்டு வெற்றிக் கிண்ணத்திற்காக நடைபெறும் கால்பந்தாட்டப் போட்டியின் சிறம்பம்சம் பற்றி உங்களால் கூறமுடியுமா?

வங்கக் கடலிலே காவியமான கேணல் கிட்டு உட்பட 10 மாவீரர்களின் நினைவான வெற்றிக் கேடயத்திற்காக நாம் இந்த கால்பந்தாட்டப் போட்டியை நடாத்துகின்றோம்.

இப்போட்டியினை நாம் கால தாமதமாகவே நடாத்துகின்றோம். ஏனெனில், சுனாமி அனர்த்தத்தினால் தமிழர் தாயகம் அனைத்தும் பாதிப்புக்குள்ளானதால் பிற்போட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இப்போட்டியில் தமிழீழத்திலுள்ள எட்டு மாவட்டங்களிலும் மாவீரர் வெற்றிக் கேடய கால்பந்தாட்டப் போட்டியில் வெற்றியீட்டிய அணிகள் கேணல் கிட்டு வெற்றிக் கிண்ணத்திற்காக மோதுகிறார்கள். தமிழீழத்தின் தலைசிறந்த கழகங்களை இனங்காண்பதற்காகவே இப்போட்டி நடாத்தப்படுகின்றது. அதாவது கேணல் கிட்டு நினைவான இந்த வெற்றிக் கேடயத்தினை தமிழீழத்திலுள்ள எந்தக் கழகம் சுவீகரித்துக் கொள்கிறது என்பதுதான் இந்தப் போட்டியினுடைய நோக்கம். கேணல் கிட்டு நினைவாக மூன்று வருடங்களாக இந்தப் போட்டியை நாங்கள் நடாத்தி வருகின்றோம். இந்த முறையும் இப்போட்டி உதயதாரகை மைதானத்தில் வெகுசிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. இதில் முக்கியமான விடயம் சுனாமியால் பெரியளவில் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்தினுடைய அணி தவிர்க்க முடியாத காரணத்தினால் இந்தப் போட்டியில் கலந்து கொள்ளாமை எமக்கு மிக மன வேதனையாக இருக்கிறது. அந்த வீரர்கள் தமது குடும்பங்கள் சுனாமியால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த நிலையில் இருப்பதனால் இந்தப் போட்டியில் தங்களால் கலந்து கொள்ள முடியாமலிருப்பதையிட்டு வருந்துவதாக எமக்கு அறிவித்திருந்தார்கள். அவர்களுக்கு எமது அனுதாபங்களையும், கவலைகளையும் தெரிவிக்கின்றோம். இன்று முல்லை மாவட்ட அணியினர் இதில் மோதிக் கொண்டிருக்கிறார்கள். இது லீக் முறையில் நடாத்தப்படுவதால் தொடர்ந்து திங்கள் வரை இது நடைபெறும். ஆகவே கேணல் கிட்டு வெற்றிக கேடயத்தை தமிழீழத்திலுள்ள எந்த அணி வெற்றிபெறுமென்பதே இதன் பெறுபேறாக அமையும்.

☐ இந்த வருடம் முஸ்லிம் மற்றும் சிங்களவர்களின் அணிகளும் கலந்து கொள்கின்றதா?


கடந்த காலங்களில் நடைபெற்ற போட்டிகளில் முஸ்லிம் வீரர்கள் கலந்து கொள்வது வழமை. இந்த வருடம் அந்த அணிகள் இங்கு வராத காரணத்தால் அந்த அணிகள் எவையும் கலந்து கொள்ளவில்லை. எனினும், மாவீரர் வெற்றிக் கிண்ணப் போட்டியில் வெற்றியீட்டிய அணிகள் தமிழீழ அணிகளாக இருப்பதனால் அவ்வணிகள் அனைத்தும் மோதுகின்றன.

☐ சுனாமித் தாக்கத்தினால் இப்போட்டியில் பாதிப்புக்கள் அல்லது பின்னடைவுகள் ஏதாவது ஏற்பட்டதாக உணர்கின்றீர்களா?

அதாவது, சனவரி மாதம் பதினாறாம் நாள் இப்போட்டி நடைபெற்றிருக்க வேண்டும். பெப்ரவரி மாதம் தமிழீழ தேசிய பெரு விளையாட்டு விழா நடைபெறுவது வழமை. இந்தத் தமிழீழ தேசிய பெரு விளையாட்டு விழாவை நாங்கள் ஒத்திவைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அத்தோடு, கேணல் கிட்டு கேடத்திற்கான இப்போட்டிகூட தாமதமாக நடத்த வேண்டிய நிலையும் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கதொன்றாகவே உள்ளது. (ச)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்





**சிந்தனைக்கு**

எமது விடுதலைப் போராட்டம் கல்விக்குக் கவசமாக இருப்பது போல,கல்வியும் எமது போராட்டத்திற்குக் காப்பரணாக நிற்க வேண்டும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 05-03-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## சுனாமியின் பெயரில் ஆக்கிரமிப்பு!

தமிழ் மக்கள் மீதான ஒடுக்கு முறைக்கு- குறிப்பாகத் தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்கும் நடவடிக்கைக்குச் சுனாமி அனர்த்தத்தையும் வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ள பேரினவாத சக்திகள் முற்பட்டுள்ளதையே திருமலைநகர முற்றவெளிப்பகுதியில் சிங்களவர்களைக் குடியேற்ற ஜே.வி.பி எடுத்துக் கொண்ட முயற்சியாகும்.

'சுனாமி' அனர்த்தமானது இன, மத பேதமின்றிச் சேதத்தையும், அழிவையும் கொடுத்துள்ளதாயினும் சிங்கள ஆட்சியாளர்களோ அன்றிப் பேரினவாத சக்திகளோ தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அழிவுகள் குறித்தோ அன்றி அவர்கள் எதிர்நோக்கும் துன்ப துயரங்களைப் பற்றியோ அக்கறை எதுவும் கொண்டதாக இல்லை.

மாறாக 'சுனாமி' அனர்த்தத்தை ஒருசாக்காக வைத்துத் தமது ஆக்கிரமிப்புச் செயற்பாட்டைத் தீவிரப்படுத்தவும், தமிழர் தேசத்தை சிதைக்கத்தக்க வகையிலும் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் அவை முனைப்பாகச் செயற்பட்டு வருகின்றன. இச்செயற்பாடுகள் பல இடங்களில் வெளிப்படையாகவே தெரிவதாயுள்ளது.

இத்தகையதொரு நடவடிக்கையே திருமலை நகரப் பகுதியில் பெரும்பான்மை இனத்தவராகிய சிங்களவர்களை ஜே.வி.பி. குடியேற்ற மேற்கொண்ட முயற்சியாகும். இம்முயற்சியானது திட்டமிட்டே மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்பதில் சந்தேகமெதுவுமில்லை. ஏனெனில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களைக் குடியமர்த்த வேறு அரசகாணிகள் இல்லாது இச்சம்பவம் ஏற்படுத்தப்பட்டதல்ல.

ஆனால் சிங்கள ஆட்சியாளர்களும் சரி, அதிகாரிகளும் சரி இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வது ஒன்றும் புதிதல்ல. இதற்கு முன்னரும் குறிப்பாக திருமலை மாவட்டத்தின் தென்பகுதியில் சுனாமியைப் பயன்படுத்திய புதிய நில ஆக்கிரமிப்பு நடவடிக்கையிலும் ஆயுதப்படைத்தரப்பைப் பலப்படுத்தும் நடவடிக்கையிலும் அரசாங்கம் இறங்கியுள்ளது.

இதைத்தவிர சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களை மீளக்குடியமர்த்துதல் என்பதும் பெரும் சர்ச்சைக்குள்ளாகியுள்ளது. அதாவது அரசாங்கம் கரையோரங்களில் இருந்து நூறு மீற்றர் தொலைவிற்கப்பால் குடியிருப்புக்கள் அமைத்தல் எனப் பொதுமுடிவு இருக்கையில் வடக்கு-கிழக்கிற்கென இருநூறு மீற்றர் தொலைவை அரசாங்கம் அறிவித்துள்ளது. மக்களின் பாதுகாப்பைப் பொறுத்து இருநூறு மீற்றர் தொலைவென்பது விரும்பத்தக்கதே. ஆயினும்,அரசாங்கம் இருநூறு மீற்றர் தொலைவைத் தேர்தெடுத்திருப்பதானது மக்களின் நலன் கருதியதானதல்ல. அடக்குமுறையின் பாற்பட்டதே.

அதாவது மக்களின் பாதுகாப்பு என்ற போர்வையில் ஆயுதப்படைத்தரப்பின் பாதுகாப்பை உறுதி செய்துகொள்வதே அரசாங்கத்தின் நோக்கமாகும். ஏற்கனவே சுனாமியால் பாதிக்கப்பட்ட தமது பாதுகாப்பு ஏற்பாடுகளைப் புனரமைப்பதில் அவசரம் காட்டிய சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பிற்குத் தற்பொழுது அரசாங்கம் அறிவிப்புச் செய்துள்ள இருநூறு மீற்றர் தொலைவென்பது ஆயுதப் படையினரின் நோக்கத்தை அரசாங்கம் நிறைவு செய்தது போன்றதாகும்.

இந்நிலையின் சிங்கள அரசும் சரி, பேரினவாத சக்திகளும் சரி தமிழ் மக்கள் சுனாமி அனர்த்தத்திலிருந்து விடுபடுவதற்கு உதவுவதற்கு ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்காத போதும் பேரினவாத சக்திகள் ஒடுக்கு முறைக்கான நடவடிக்கைகளில் தீவிரவாதத்தை வெளிப்படுத்தின. அதிலும் குறிப்பாகப் பௌத்த சிங்கள பேரினவாதத்திற்குப் புதிய தலைமை வழங்க முற்பட்டவருக்கும் ஜே.வி.பி இந்த விடயத்தில் தீவிர அக்கறை காட்டி வருகிறது.

'சுனாமி' அனர்த்தத்தை ஜே.வி.பி. போன்று வேறு எவரும் அரசியல் ஆக்கவில்லை. வேறு விதமாகக் கூறுவதானால் வியாபாரம் ஆக்கவில்லை. தென்னிலங்கையிலும் ஜே.வி.பி. இதனையே செய்தது. ஏற்கனவே, தமிழர் தாயகத்திற்கு நிவாரணப் பொருட்கள், சர்வதேச நிதி உதவிகள் வந்தடைந்ததற்குப் பெரும் இடையூறைத் தோற்றுவிப்பதாக ஜே.வி.பி. உள்ளது.

இத்தகைய செயற்பாட்டுடன் சுனாமி அனர்த்தத்தைப் பயன்படுத்தி தமிழர் தாயகப்பகுதியில் ஒரு பகுதியையாயினும் கபளீகரம் செய்ய முற்பட்டுள்ளது. ஜே.வி.பி யின் இம்முயற்சியானது தற்போதைய யுத்தநிறுத்த சூழ்நிலைக்கு மட்டுமல்ல சமாதான முயற்சிகளுக்கும் குந்தகம் விளைவிக்கத்தக்கதாகும்.

# சமாதானப் பேச்சு முயற்சிகளை நெருக்கடிக்குள் தள்ளும் கதிர்காமர்

**~கூட்டமைப்பு பா.உ ஜோசப் பரராஜசிங்கம் குற்றச்சாட்டு**

சிறிலங்கா அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சு முயற்சிகளை நெருக்கடி நிலைக்குத் தள்ளும் வகையில் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் செயற்பட்டு வருவதாக தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் குற்றம் சுமத்தியுள்ளார். இலங்கை இனப்பிரச்சினை குறித்து தீர்க்கமான முடிவினை இந்தியாவால் மட்டுமே ஏற்படுத்த முடியும் என்றும், எனவே இந்தியா, இலங்கை இன முறுகலைத் தீர்க்கும் முயற்சியில் அதிக ஈடுபாடு காட்ட வேண்டும் என்றும் கதிர்காமர் அண்மையில் தெரிவித்தகருத்து இதனைத் தெளிவாக உணர்த்துவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். நோர்வே தரப்பினர் தற்போது மத்தியஸ்த முயற்சியில் ஈடுபட்டுள்ள நிலையில் கதிர்காமரின் இந்தக் கருத்து, குழப்பங்களை ஏற்படுத்தும் நோக்கம் கொண்டது என்றும் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார் (32)

**— வட கிழக்கிற்கு சுனாமி அனர்த்த நிவாரணம் —**

# எடுத்துச் சென்ற மலையக மக்களிடம் சிறிலங்காப் பொலிசார் விசாரணை

(கொழும்பு)

சுனாமியின் பின்னர் வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு நிவாரணங்ளை எடுத்துச்சென்ற மலையக மக்களிடம் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.இவ்வாறான விசாரணைகள் கண்டி, மாத்தளை மற்றும் பலாங்கொட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை தொடர்பாக மத்திய மாகாண சபையின் உறுப்பினரும், மலையக மக்கள் முன்னணியின் கண்டி மாவட்ட அமைப்பாளருமான ராஜரட்ணம் தெரிவிக்கையில்; சுனாமியின் பின்னர் அரசாங்கம் தமிழ் மக்களுக்கு உரிய முறையில் நிவாரணங்களைப் பகிரவில்லை. எனவே தமது உறவுகளுக்கு உதவும் வகையில் மலையகத் தமிழ் மக்கள் வடக்கு கிழக்கு மக்களுக்கு உதவினர் இது குறித்து பொலிசார் விசாரணை மேற்கொள்வது மனிதாபிமானமற்ற செயலாகும் எனக் குறிப்பிட்டார். (32)

**–லஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு–**

# ஆனந்தராஜாவை நியமிக்க சனாதிபதி சந்திரிகா மறுப்பு

லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் உறுப்பினராக செயற்படுவதற்காக முன்னாள் பொலிஸ் மா அதிபர் ஆனந்தராஜா பரிந்துரை செய்யப்பட்ட போதும், அதனை சனாதிபதி நிராகரித்துள்ளார். முன்னாள் நீதிபதிகளான அமிர் இஸ்மாயில் மற்றும் பி.எதிசூரிய ஆகியோருடன் ஆனந்தராஜாவின் பெயரும் அரசியலமைப்பு சபையினால் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. எனினும் ஆனந்தராஜாவுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள போதைவஸ்துக் குழுவுடனான தொடர்புகளின் அடிப்படையிலேயே சனாதிபதியினால் இவர் தொடர்பான பரிந்துரை நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் உறுப்பினர்கள் நியமனம் முடிவுறாத அடிப்படையில் தொடர்ந்தும் லஞ்சஊழல் ஆணைக்குழு தமது செயற்பாட்டை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (32)

# நிவாரணப் பொருட்களுக்கான சுங்கத்தீர்வை அரசால் நீக்கம்

ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கான உலக நாடுகளால் அனுப்பிவைக்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் அனைத்திற்குமான சுங்கத் தீர்வையினை அரசாங்கம் நீக்கியுள்ளது. நிவாரணப் பொருட்களுக்கான சுங்கத்தீர்வையினை அரசாங்கம் அறிவித்ததைத் தொடர்ந்து இந்த நிவாரணப் பொருட்களைப் பொறுப்பேற்க சம்பந்தப்பட்டவர்கள் தயக்கம் காட்டியமை குறிப்பிடத்தக்கது. அரசாங்கத்தின் சுங்கத் தீர்வை அறிவித்தலை அடுத்து பெருமளவான நிவாரணப் பொருட்கள் கட்டுநாயக்க விமானநிலையத்தில் தேங்கியிருந்தன. இதனை உடனடியாக அகற்றுவதற்காகவே இந்தப் பொருட்களுக்கான சுங்கத் தீர்வையினை அரசாங்கம் நீக்கியுள்ளதாக அறிவித்துள்ளது. நிவாரணப் பொருட்களுக்கான சுங்கத்தீர்வை நீக்கமானது எதிர்வரும் எப்பிரல் 26ஆம் திகதி வரை மட்டுமே அமுல்படுத்தப்படும் என்றும் அதனைத் தொடர்ந்து தீர்வை அறவிடப்படும் என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது. (32)

# திட்டமிட்ட குற்றச்செயல்களை தடுக்க பொலிசார் நடவடிக்கை

**-சிறிலங்கா பொலிஸ் தலைமையகம் அறவிப்பு**

திட்டமிட்ட குற்றச் செயல்களை தடுப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. பல விசேட குழுக்கள் இந்தத் திட்டத்தில் இணைந்துள்ளன. இந்நடவடிக்கைகளின் போது சுமார் 40 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். குற்றப் புலனாய்வுப் பிரிவு திட்டமிட்டு செயற்படும் குற்றவாளிகள் தொடர்பான தகவல்களை சேகரித்துள்ளது. இத்தகவல்களின் அடிப்படையிலேயே கைதுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேடப்பட்டுவரும் குற்றவாளிகளில் பலர் கொழும்பை விட்டு வெளியேறி இருப்பதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார். குற்றச்செயல்களை குறைக்கும் முகமாக கொலைச் சம்பவங்களில் ஈடுபடும் சிறிய குழுவினரைக் கைது செய்வதற்கான திட்டமொன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# ஐ.தே.கட்சியின் நிலைப்பாட்டின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பித்தால் ஆதரவு!

**ஐ.தே.க.துணைப் பொதுச் செயலாளர்**

ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாட்டின் அடிப்படையில் அரசாங்கம் சமாதான முயற்சிகளை ஆரம்பிக்குமானால் அரசுக்கு ஐக்கிய தேசிய கட்சி ஆதரவளிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் துணைப் பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளார். அரசாங்கம் சமாதான முயற்சிகளைத் தொடர முடியாத நிலையில் உள்ளது அரசில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதை அனுமதிக்காது. ஜே.வி.பி யின் எதிர்ப்பினையும் தாண்டி அரசாங்கம் சமா தான முயற்சிகளை உரிய முறை யில் முன்னெடுக்குமானால் அதற்கு ஐக்கிய தேசியக்கட்சி ஆதர வளிக்கும் என அவர் கூறியுள்ளார். (32)

## வவுனியாவிலிருந்து கிளிநொச்சிக்கு மின்சாரம் வழங்குவது குறித்து ஒப்பந்தம்

வவுனியாவில் இருந்து கிளிநொச்சிக்கு மின்சாரத்தை வழங்கும் திட்டம் தொடர்பான ஒப்பந்தம் ஒன்று நேற்று கைச்சாத்திடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. 132 கிலோவாற் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திட்டம் ஒன்றிற்குப் பல மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியினை ஜப்பான வழங்கியுள்ளது. இந்தத் திட்டம் தொடர்பான ஒப்பந்தம் நிதி அமைச்சில் நேற்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. (32)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# கபடத்தனமாக சிங்களவரைக் குடியேற்ற முயன்ற ஜே.வி.பி தமிழ் மக்களை இனவாதிகள் என வர்ணிப்பது வேடிக்கை

**-கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம்**

(திருகோணமலை)

திருகோணமலை நகரசபைக்குச் சொந்தமான முற்ற வெளியின் ஒரு பகுதியில் கபடத்தனமான முறையில் இரவோடு இரவாக பெரும்பான்மை இனத்தவரை குடியேற்ற முயற்சித்த ஜே.வி.பியினர் அம் முயற்சியைத் தடுத்து நிறுத்த எதிர்ப்பு நடவடிக்கையை மேற் கொண்ட தமிழ்மக்களை இனவாதக்குழு என்று வர்ணிப்பது வேடிக்கையாக இருக்கிறது. இவ்வாறு திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம் தெரிவித்தார்.

"கடற்கோளின் காரணமாக வீடிழந்த மூவின மக்களையும் குடியமர்த்த தாம் முயற்சி எடுத்ததாக இப்போது கூறும் ஜே.வி.பி.யினர் கடற்கோள் அனர்த்தம் மற்றும் புனர்நிர்மாண மாவட்டச் செயலணியில் இது பற்றி கூறினார்களா? மாவட்டச் செயலணி இது குறித்து முடிவேதும் எடுக்காத நிலையில் முற்றவெளியில் ஒரு பகுதியில் வீடுகளைக் கட்டுவதற்கு ஜே.வி.பி.யினருக்கு யார் அதிகாரம் வழங்கினார்கள் ? கபடத்தனமான முறையில் நில ஆக்கிரமிப்பை மேற்கொள்வதற்கு பேரினவாத சக்திகள் மேற்கொண்ட முயற்சியே இது என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று" என்று பாராளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் குறிப்பிட்டார்.

கடற்கோளின் பின் திருகோணமலை மாவட்டத்தில் மூவின மக்கள் மத்தியில் உருவாகி வரும் புரிந்துணர்வைக் குழப்பி அரசியல் ஆதாயம் பெறவும் பேரினவாதத்தை ஊன்றச் செய்யும் முயற்சியிலும் தான் ஜே.வி.பி.யினர் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் துரைரட்ணசிங்கம் குறிப்பிட்டார். (25)

# -கொடிகாமப் பகுதியில்- ஒருவருக்கு வெட்டுக் காயம் 3 கடைகள் மீது தாக்குதல்

கொடிகாமம் பகுதியில் குழு ஒன்றினால் ஒருவர் வெட்டிக்காயப் படுத்தப்பட்டார். அத்துடன் மூன்று கடைகள் தாக்கிச் சேதப்படுத்தப் பட்டுள்ளன.

நேற்றுக் காலை எட்டு மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதேவேளை, இப்பகுதியில் நேற்று மாலை ஐந்து மணியளவில் ஒருவர் அடித்துப் படுகாயப்படுத்தப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# கொழும்பிலிருந்து மேலதிக கலகம் அடக்கும் பொலிசார்!

யாழ்ப்பாணத்தில் தோன்றியுள்ள நிலையை அடுத்து நோக்கில் கொழும்பில் இருந்து கலக தடுப்பு பொலிசார் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

படையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் நேற்று ஏற்பட்ட முறுகல் நிலை பல்வேறு இடங்களில் கலவரங்களாக மாறியிருந்ததை அடுத்தே . கொழும்பிலிருந்து மேலதிகமாக கலகம் அடக்கும் பொலிசார் அனுப்பி வைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (32)

# அதிகரிக்கப்பட்ட வெளிநாட்டு இராணுவ நிதி சிறிலங்கா கடற்படைக்கு உதவக் கூடும்

**- அமெரிக்க துணைவெளிவிவகார அமைச்சர் டொனால்ட் பேன்ட்**

(கொழும்பு)

அதிகரிக்கப்பட்ட வெளிநாட்டு இராணுவ நிதி சிறிலங்கா கடற்படைக்கு உதவக் கூடுமென அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான முதன்மை துணைவெளி விவகார அமைச்சர் டொனால்ட் பேன்ட் தெரிவித்துள்ளார்.

தேசிய பிராந்திய பயங்கரவாத குழுக்களின் அச்சுறுத்தல்களை எதிர் கொள்வதற்கும், படைகளை மேம்படுத்திக் கொள்வதற்கும் உதவிகள் பயன்படுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். அமெரிக்கா வெளிநாடுகளுக்கு வழங்கும் நிதியுதவிகளை அங்கீகரிக்கின்ற செனட் குழுவின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய வேளை அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

புலிகளும் - அரசும் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டுமென அமெரிக்காவும் நன்கொடை நாடுகளும் வலியுறுத்துகின்றன என தெரிவித்துள்ளார். பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் புனர்நிர்மாண நல்லிணக்க திட்டங்களை அமுல் செய்வதற்கு அமெரிக்கா தொடர்ந்து உதவி வழங்குமென சுட்டிக்காட்டியுள்ளார்.

## திருமலை கதவடைப்பு நண்பகலுடன் முடிவு

திருகோணமலையில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட பூரண கதவடைப்பு போராட்டம் மதியம் 12 மணியுடன் விலக்கிக்கொள்ளப் பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறையின் ஆலோசனையின் பேரில் இந்த முடிவை தமிழ்மக்கள் பேரவை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று முன் தினம் இடம்பெற்ற சம்பவமானது பாரதூரமான விளைவை ஏற்படுத்தக்கூடியதாகுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் ரத்து தருவ என்ற பெயரில் தாம் ஏற்பாடு செய்திருந்த சுனாமி புனரமைப்பு நிகழ்ச்சி திட்டத்தை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மாறுபட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தியுள்ளதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் ஜெயந்த விஜயசேகர இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

### செய்தியாளர்....

வைத்து தாக்கப்பட்டுள்ளார்.

இராணுவத்தினரின் தாக்குதலில் காயமடைந்த இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதேவேளை மற்றொரு செய்தியாளரின் வாகனம் மீதும்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல்களுக்கு யாழ். மாவட்ட ஊடகவியலாளர் சங்கம் தனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. (33)

### யாழ்.இல் படையினரின்...

மாணவர்கள் காயமடைந்தனர்.

நேற்றுப் பகல் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு முன்பாகப் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் உரும்பிராயைச் சேர்ந்த க.கதிரமலை (வயது-58) என்பவர் மரணமானார்.

யாழ்.சத்திரத்துச்சந்தியில் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் யாழ்.போதனா வைத்தியசாலையில் பணியில் ஈடுபட்டுள்ள தனியார் நிறுவன ஊழியரான குணசீலன் அன்ரன் (வயது -21) மற்றும் கந்தையா சிவராசா(வயது-44) ஆகியோர் படுகாயமுற்ற நிலையில் யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது படையினர் நடத்திய தாக்குதலில் 15 இற்கு மேற்பட்ட மாணவர்கள் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (27,41,33,28,சு)

### இராணுவ சாரதிக்கு விளக்கமறியல்

யாழ். நகரப் பகுதியில் வைத்து பாடசாலை மாணவி துளசிகாவை மோதிக் கொன்று விட்டுத் தப்பி ஓடித் தலைமறைவான இராணுவ வாகனச் சாரதி நேற்று பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். நகரில் உள்ள 512 ஆவது படைத்தளத்தினுள் இருந்த இவர் சிறிலங்காப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது அவரை வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (33)

### சனநாயக...

சியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி யாழ். இல் நேற்று நிகழ்ந்த சம்பவம் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இவ் அறிக்கையின் விபரம் வருமாறு,

நேற்றுக் காலை 8.00 மணியளவில் யாழ். வைத்தியசாலையின் வீதியால் சென்று கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினரின் உழவு இயந்திரம் மோதியதில் காயப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்த சம்பவம் துயரமானது அனைவரையும் சோகத்தில் ஆழ்த்துகின்றது.

இராணுவ வாகனங்கள் மக்களுடைய நெரிசல் மிக்க இப்பாதையில் செல்லும் கட்டுப்பாடற்ற வேகத்தினாலேயே இக்கோர விபத்து நிகழ்ந்தது என நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். அதேநேரத்தில் சட்டத்திற்குப் புறம்பாக சிறிலங்கா காவல் துறையினர் அத்தடயங்களை மூடி மறைத்து சட்டத்திற்கு முரணாகச் செயற்பட்டமையைக் கண்டு பொறுக்க முடியாத மக்களும் சகல மாணவர்களும் ஒன்று திரண்டு சனநாயக வழியில் தங்களுடைய எதிர்ப்புக்களை வெளிப்படுத்தியபோது சிறிலங்கா பொலிசாரும், இராணுவத்தினரும் அப்பாவி மக்கள் மீது ஆயுத முனையில் கண்ணீர்ப்புகைக் குண்டுகளையும், குண்டாந்தடிப் பிரயோகங்களையும், துப்பாக்கிப் பிரயோகங்களையும் மேற்கொண்டு மக்களைத் தாக்கினர். இதனால் மேலும் ஆத்திரமடைந்த மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இந்நிலைமையைச் சரியாகக் கண்டு மக்களை அமைதிப்படுத்த முயற்சிக்காமல்,மக்கள் மீது நேரடியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இராணுவத்தின் வேட்டுக்கு யாழ். பல்கலைக்கழக வீதியால் சென்று கொண்டிருந்த வயோதிபர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் இருவர் காயப்பட்டுள்ளனர். இச் சம்பவங்கள் நேரடியாக யுத்த நிறுத்த மீறல் சம்பவங்கள், போர் நிறுத்த மீறல் சம்பவங்கள் என்பதை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு சுட்டிக்காட்டியதுடன் நேரடியான கண்டனங்களையும் தெரிவித்துள்ளேன்.

அத்துடன் இச் சம்பவத்துடன் தொடர்பு படாத சர்வதேச மாணவர் பேரவை அலுவலகத்தினுள் இராணுவத்தினரும், பொலிசாரும் புகுந்து கண்ணாடியை அடித்து நொருக்கி உந்துருளியையும் சேதப்படுத்தி, கட்டடத்திற்கும் துப்பாக்கிப் பிரயோகம் செய்து சேதப்படுத்தியமை மாணவர்களை அச்சுறுத்தும் ஒரு செயலாகும்.

எவரதும் தூண்டுதலும் பின்னணியும் இல்லாமல் இயல்பாகவே மக்கள் கிளர்ந்தெழுந்ததினால் ஏற்பட்ட இச் சம்பவங்கள் புலிகளின் தூண்டுதலினாலே தான் நடைபெற்றன என இராணுவத்தினர் கூறும் உண்மைக்கும் புறப்பான செய்தியை மறுப்பதுடன் இதற்கு எமது வன்மையான கண்டனத்தையும் தெரிவிக்கின்றோம். மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகங்களைச் செய்வதால் மட்டும் மக்களது உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியாது. இவ்வாறு மக்களின் உரிமைகளைப் பறிக்கின்ற பொழுது துன்பமான நிலைமை தோன்றும் என்றும் இவ்வாறான மக்களைப் பாதிக்கின்ற, மக்கள் உயிர்களைப் பறித்தெடுக்கின்ற சம்பவங்கள் இராணுவத்தரப்பால் இடம்பெற கண்காணிப்புக் குழுவினர் இடமளிக்கக் கூடா தெனவும் வலியுறுத்தியுள்ளோம்.

# சிறில. சுதந்திரக் கட்சியின் யாழ். செயலகம் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் உள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிராந்திய அலுவலகம் பொது மக்களால் தாக்கிச் சேதப்படுத்தப்பட்டது.

நேற்று யாழ். நகரில் பாடசாலை மாணவி ஒருவர் இராணுவத்தினரின் உழவு இயந்திரத்தால் மோதிக் கொல்லப்பட்டமையால் ஆத்திரமடைந்த பொது மக்கள் இதனைத் தாக்கிச் சேதப்படுத்தினர். (33)

### தெ.கி....

விடுக்கும் கடிதத்தையும் வீட்டிற்கு முன்பாக வைத்து விட்டுச் சென்றுள்ளனர் என்று இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் சம்மாந்துறைப் பொலிசார் தெரிவித்தனர்.

### சர்வதேச...

இந் நிலையில் மேற்படி கட்டடத்தினுள் அத்துமீறி நுழைந்த பொலிசார் கட்டட வாயிலில் நின்றிருந்த உந்துருளிகள், ஈருருளிகள் என்பனவற்றை அடித்து துவம்சம் செய்ததுடன், அவற்றை அபகரித்தும் சென்றுள்ளனர்.

இது குறித்து மாணவர் பேரவையினர் தமது கண்டனத்தை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டுள்ளனர். (சு,28,41,33)

### யாழ்.இல்...

சாலைக்கு முன்பாக இராணுவத்தினரின் உழவு இயந்திரம் மோதி அவரை இழுத்துச் சென்றது. படுகாயமடைந்த மாணவி உடனடியாக யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டது.

இவரை மேலதிக சிகிச்சைக்காக கொழும்பிற்கு கொண்டு செல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் 10.55 மணியளவில் மாணவி உயிரிழந்தார்.

இதனையடுத்து வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளும், ஆசிரியர்களும் பாடசாலைக்கு முன்பாக வீதி மறியலில் ஈடுபட்டனர். பின்னர் ஏனைய பாடசாலை மாணவர்களும், இளைஞர்களும் வழி மறிப்பிலும், ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டனர்.இவர்கள் மீது பொலிசார் தாக்குதல் நடத்தியதையடுத்து வேம்படி வீதியால் வந்த சிறிலங்கா விமானப் படைக் குழுவிற்குச் சொந்தமான வாகனத் திற்குத் தீவைக்கப்பட்டது.

மேலும் பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்திப் பகுதியில் ரயர்களை எரித்து இராணுவத்தினரின் போக்குவரத்துத் தடைச் செய்யப்பட்டது. அத்துடன் பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையிலுள்ள ஆலடிச் சந்தி இராணுவக் காவலரண் தீமூட்டி எரிக்கப்பட்டதுடன் கலட்டிச் சந்திப்பகுதியிலிருந்த அப்பக்கடையும் அடித்து நொருக்கப்பட்டு எரியூட்டப்பட்டது.

இச் சம்பவங்களால் யாழ். நகரப் பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது. இதன்போது பெருமளவு படையினரும், பொலிசாரும் குவிக்கப்பட்டனர். படையினருக்கு எதிராக நேற்று மாணவர்கள் நடத்திய போராட்டங்களின் போது யாழ். நகரில் வைத்து ஒன்பது பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் மாணவர்களாவர். (28,41,33,சு)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது